வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 13.09.2021 திங்கட்கிழமை | இதழ் : 282 | பக்கங்கள் : 16




# இலங்கை குறித்து பச்செலெட்டின் உரை கடுமையானதாக அமையும்?



## ஜெனிவா கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்

ஜெனிவா, செப்ரெம்பர் 13

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், மனித உரிமைகள் ஆணையாளர் மிற்சல் பச்லெட் அம்மையார் தனது ஆரம்ப உரையில் இலங்கை நிலைகுறித்து குறிப்பிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. முக்கியமாக சாட்சியங்களைச் சேகரிப்பதற்கான அலுவலகத்தை அமைப்பது குறித்த பேரவையின் நிலைப்பாட்டை அவர் அறிவிப்பார் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

15

## 156 பேருக்கே பரிசோதனை! வடக்கில் 43 பேருக்கு தொற்று

### யாழ். போதனா ஆய்வக முடிவு

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். போதனா மருத்துவ மனையில் நேற்று 156 பேரின் மாதிரிகளே பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில், 43 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ். போதனா மருத்துவ மனையில் 9 பேர், சங்கானை மருத்துவ அதிகாரி பிரி வில் 3 பேர், சாவகச்சேரி மருத்துவ அதி

15

## கொரோனாவால் 144 பேர் மரணம்

கொழும்பு, செப். 13

நாட்டில் மேலும் 144 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டன என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

77 ஆண்களினதும், 67 பெண்களினதும் மரணங்களே இவ்வாறு பதிவாகியுள்ளன.

15

## எதிர்காலத்திலாவது கோரிக்கைகளை ஒரேகுரலில் வலியுறுத்த வேண்டும்

### சிவாஜிலிங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 13

“எதிர்காலத்திலாவது ஒரே குரலில் எமது கோரிக்கைகளை சர்வதேசத்திடம் நாம் வலியுறுத்த வேண்டும். அதன் மூலமே நாம் எதிர்பார்க்கும் நீதியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்”, என வலியுறுத்தியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சிவாஜி

15

## ஒருவேளை உணவை குறையுங்கள்! ஆளும் கட்சியின் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, செப். 13

ஒருநாளில் மூன்றுவேளை உணவு உண்பவர்கள் இரு வேளையாகக் குறைக்க வேண்டும் என்று ஆளும் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகத் குமார சுமித் ஆராச்சி கேட்டுள்ளார்.

கொரோனா தொற்று

15



## ஒற்றுமை, சகவாழ்விலேயே எதிர்காலம் தங்கியுள்ளது

### ஜி 20 சர்வமத மாநாட்டில் பிரதமர் மஹிந்த உரை

போலோக்னா, செப். 13

பொருளாதார, அரசியல் மற்றும் சமூக இலக்குகளை அடையும் போது பெரும்பாலும் எமது எதிர்காலம் ஒரு தேசம் என்ற ரீதியில் அதன் ஒற்றுமை மற்றும் சகவாழ்விலேயே தங்கியுள்ளது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

15

## நோய் அறிகுறிகள் இல்லாமல் 80 வீதமான தொற்றாளர் சமூகத்தில் நடமாடுகின்றனர்

### அதிக பரிசோதனை தேவை என்கிறார் திஸ்ஸ விதாரண

கொழும்பு, செப். 13

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களில் 80 வீதமானவர்கள் நோய் அறிகுறியை வெளிப்படுத்தாமல் சமூகத்தில்நடமாடுகின்றனர். நாட்டில் சமூக பரவல் காணப்படுகின்றது. தற்போது கொத்தணி வைரஸ் பரவல் குறித்து தகவல் வெளியாவதில்லை. மாறாக சமூகத்திலேயே பரவல் காணப்படுகின்றது என பேராசிரியர் திஸ்ஸ வித்தாரன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நோயாளிகளை அடையாளம் காண்பதற்கு அதி களவு பி.சி.ஆர்.

15





## இப்படியும் நடக்கிறது...!

இந்த ஊர்க்குருவி சிறுவனாக இருந்த காலத்தில் கோவில்களில் திருவிழாக் காலங்களில் நாடகம் போடுவார்கள். அதில், ஒன்று கோவலன் கண்ணகி நாடகம்.

கோவலன் தனது மனைவி கண்ணகியின் கால் சிலம்பை பொற்கொல்லன் ஒருவனிடம் விற்க முயல்வான். அந்தக் கால் சிலம்பு, அரசியிடம் தான் திருடிய கால் சிலம்பைப் போல இருப்பதைக் கண்ட பொற்கொல்லன்,

அரசியின் கால் சிலம்பை திருடிய திருடனை, தான் பிடித்து வைத்திருப்பதாக அரசனிடம் வந்து சொல்ல,

“கொல்லச் சிலம்பு கொணர்க“ என்பதற்கு பதிலாக, “கொன்றச் சிலம்பு கொணர்க”, என்று அரசன் வாய்தடுமாறிச் சொல்லிவிட, காவலர்கள் கோவலனைக் கொன்று கால் சிலம்பை மீட்டு வந்துவிடுவார்கள்.

கணவன் தவறான தண்டனை கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டதை அறிந்த கண்ணகி, அரசனிடம் நீதிகேட்டு அரசவைக்கு வருவாள்.

அது தனது கால் சிலம்பு என்பதை கண்ணகி நிரூபிக்க, தனது தவறை உணர்ந்த பாண்டிய மன்னன், “பொன்செய் கொல்லன் தன் சொல்கேட்ட யானோ அரசன்“ என்று கூறியவாறு சிம்மாசனத்திலிருந்து விழுந்து இறந்து விடுவதாக கதை செல்லும்.

ஆனால், அதற்குப் பின்னனரும் பொறுக்க முடியாத கண்ணகி மதுரை நகரை எரித்ததாக நாடகம் முடியும்.

அந்தக் காலத்தில் சிறுவனாக இருந்தபோது தவறுசெய்த மன்னன் தான், தன் தவறை உணர்ந்து இறந்து விடுகின்றானே, இவர் எதற்காக மதுரையை பின்னர் எரிக்கவேண்டும்? இது அவசியமற்றதல்லவா என்று நினைத்ததுண்டு.

நமது அரசியல் தலைவர்களின் தவறான நடவடிக்கைகளால் மக்களே தொடர்ந்து துன்பங்களை அனுபவிக்க நேர்கின்றது என்பது குறித்து பலரும் தொடர்ச்சியாக பேசிவருகின்றனர்.

அரசியல் தலைவர்கள் மக்களை ஒவ்வொரு விடயத்திலும் சரியாக வழிநடத்தியிருந்தால் இந்த அவலங்கள் தொடர்ந்திருக்காது என்றே பலரும் தெரிவித்து வருகின்றனர்.

உண்மைதான நமது அரசியல் தலைவர்கள் ஒவ்வொருவருமே தமது அரசியல் இருப்பை எப்படி தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளலாம் என்பதிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அதனால்தான் மக்கள் தத்தமது ஒவ்வொரு தேவைக்காகவும் வீதிகளில் இறங்கி போராட வேண்டியிருக்கின்றது. அவர்களின் அவலங்கள் இவர்களின் கண்களுக்கு தெரிவதில்லை.

ஓர் அன்பர் அலுவலகம் வந்திருந்தார்.

அவரிடம் இந்த விடயங்களை சொல்லிக் கொண்டிருந்தபோது. அவர் மேலே சென்ன கோவலன் கண்ணகி கதையைச் சொல்லிவிட்டு, சிறுவயதில் எனக்குள் தோன்றிய அந்த கேள்வியை என்னிடம் கேட்டார்.

மதுரையை கண்ணகி எரித்தது எதற்காக? என்று.

நானும் அன்று சிறுவயது சந்தேகம் இது என்று விளக்கினேன்.

அதற்கு அவர் விளக்கம் சொன்னார், “வேறு ஒன்றுமில்லை ஐசே, தவறான ஒருவரை அரசனாக வைத்திருந்தது அந்த நாட்டு மக்களின் தவறும்தான் என்பதால் தான் அந்த மக்களுக்கு தண்டனை கொடுக்கவே கண்ணகி மதுரையை எரித்தாள்” என்று.

இப்போது புரிந்தது, நமது மக்கள் எதற்காக கஷ்டப்படுகிறார்கள் என்று?

**- ஊர்க்குருவி**

# மன்னாரில் ஒருநாளில் மட்டும் 95 தொற்றாளர்கள் அடையாளம்!

*மன்னார், செப். 13*

மன்னாரில் நேற்று முன்தினம் மட்டும் 95 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த நிலையில், கடந்த 11 தினங்களில் மட்டம் 276 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் விடுத்த கொரோனா நிலவரம் தொடர்பான அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், மன்னார் மாவட்டத்தில் சனிக்கிழமை மட்டும் 95 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 84 கொரோனா தொற்றாளர்கள் மடு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 11 நாட்களில் 276 கொரோனா தொற்றாளர்கள் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடம் மாவட்டத்தில் 1943 தொற்றாளர்களும், தற்போது வரை மாவட்டத்தில் மொத்தமாக 1960 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் சனிக் கிழமை வரை 22 கொரோனா தொற்று மரணம் நிகழ்ந்துள் ளது என்றும் அந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உலர் உணவு வழங்கல்!

*யாழ்ப்பாணம், செப். 13*

உடுவில் பிரதேச செயலகத்தில் வசிக்கும் 100 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும், 500 ரூபாயும் வழங்க நேயம் பவுண்டேஷன் முன்வந்துள்ளது.

கொரோனா தொற்று நிலைமை - ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டவர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பில் தகுதியானவர்களின் பெயர் பட்டியலை தந்துதவுமாறு உடுவில் பிரதேச செயலகத்திற்கு அந்த அமைப்பு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இந்த உதவி திட்டம் நாளை செவ்வாய்க் கிழமை வழங்கப்படவுள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

# கட்டணத்தை செலுத்துமாறு வலியுறுத்து!

*யாழ்ப்பாணம், செப். 13*

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வட பிராந்திய வாடிக்கையாளர்கள் அனைவரும் தங்களின் மாதாந்த நீர் பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் ஏற்கனவேயுள்ள நீர் பட்டியல் நிலுவைகளை செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் சபை மக்களுக்கான குடிதண்ணீரை வழங்கும் பொருட்டு குடிதண்ணீருக்கான உற்பத்தி செலவாக பெரும் தொகையை முதலிட்டு வருகின்றது.

எனவே, அதனை தொடர்ந்து மக்களுக்கு தொடர்ச்சியான சேவையை வழங்கும் பொருட்டு பயனாளிகள் அனைவரையும் காலக்கிரமத்தில் தங்களது நீர்பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் ஏற்கனவேயுள்ள நீர்ப்பட்டியல் நிலுவைகளை செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டணத்தை வீட்டிலிருந்தவாறு தேசிய நீ வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஸ்மார்ட் சோன் (Smart Zone waterboard.lk) என்ற இணையத் தளமூடாகவோ, ஒன்லைன் வங்கி சேவைகள் மற்றும் ஒன்லைன் பிற சேவைகள் மூலம் செலுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### கல்வி TV CHANNEL-1 — 13.09.2021 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி TV CHANNEL - 2 — 13.09.2021 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
13.09.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆவணி 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## மீண்டும் ‘கியூ’ சகாப்தமா?

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஓர் உடனடியான தேர்தலுக்கு செல்லுமாறு அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். நாடு வங்குரோத்து நிலைக்கு சென்றிருக்கின்றது. அரசாங்கம் மீண்டும் மூடுண்ட பொருளாதார நிலைமையை ஏற்படுத்தி, மக்களை மீண்டும் ‘கியூ’வில் நிற்கும் சகாப்தத்தை நோக்கிக் கொண்டு சென்றிருக்கின்றது. இந்த நிலைமையை அரசாங்கத்தினால் மாற்றியமைக்க முடியாது. எனவே, ஓர் உடனடி தேர்தலுக்கு செல்ல வேண்டும். நாட்டின் பொருளாதாரத்திற்கு புத்துயிர் கொடுக்கக்கூடிய ஓர் அரசாங்கமே இப்போது மக்களுக்கு தேவை. ஐக்கிய மக்கள் சக்தியிடம் பொருளாதாரத்தை மறுசீரமைக்கும் நிபுணத்துவம் இருக்கின்றது. இவ்வாறு, சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார்.

நாடு வங்குரோத்து நிலைமையை நோக்கி சென்று கொண்டிருப்பதாகவே பலரும் எச்சரித்து வருகின்றனர். சஜித் பிரேமதாஸ போன்ற அரசியல்வாதிகள் பொருளாதார நிலைமைகள் தொடர்பில் கூறுகின்றபோது, அதனை எதிரணியின் கருத்து என்று இலகுவாக அரசாங்கம் புறம்தள்ளிவிடலாம். ஆனால், சுயாதீன பொருளாதார நிபுணர்கள் பலரும் நிலைமைகள் தொடர்பில் தொடர்ந்தும் எச்சரித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நாட்டின் இறக்குமதிகளைக் குறைப்பதன் மூலம் அந்நியச் செலாவணி கையிருப்பை அதிகரிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுவருகின்றது. ஆனால், மறுபுறும் ஏற்கனவே இருக்கின்ற பொருட்களின் விலைகள் அதிகளவில் அதிகரித்து செல்கின்றன. ஏற்கனவே, இலங்கை உணவு நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகின்றது. உணவு நெருக்கடியை எதிர்கொள்வதற்காகவே, அவசரகால நிலையையை பிரகடனம் செய்திருப்பதாக அரசாங்கம் வாதிடுகின்றது. அவ்வாறாயின் உணவு நெருக்கடி நிலை ஏற்பட்டிருப்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கின்றது.

அரசாங்கம் பெரும்நெருக்கடி நிலையை எதிர்கொண்டிருக்கின்றது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால், இந்த நெருக்கடி நிலையை அரசியலாக்கும் தந்திரோபாயங்களுடன் எதிரணி செயல்படுகின்றதா என்பதும் இன்னொரு கேள்வி. ஏனெனில், எதிரணியினர் இந்தச் சூழலை கச்சிதமாகப் பயன்படுத்தினால், எதிர்வரும் ஆண்டுகளில் அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தலாம். ஆனால், அதற்கான தந்திரோபாயங்களுடன் எதிரணியினர் செயல்படவில்லை. எதிரணியினர் துண்டுகளாக இருப்பதே இதற்கான காரணமாகும். சஜித் பிரேமதாஸ ஒரு பக்கமாகவும், மிகவும் பலவீனமான நிலையில் ரணில் விக்கிரமசிங்க பிறிதொருபுறமும், சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் இன்னொரு புறமாகவும் சிதறிக்கிடக்கின்றனர். இவர்கள் இவ்வாறு சிதறிக் கிடக்கும் வரையில், ராஜபக்ஷக்களுக்கான அரசியல் சவால் பலமடையப் போவதில்லை. சவால் பலவீனமாக இருக்கின்றபோது அதனை சமாளிக்கக்கூடிய நிலையிலேயே அரசாங்கம் இருக்கின்றது. ஏனெனில், அந்தளவிற்கு அரசாங்கம் இன்னும் பெரியளவில் பலவீனமடையவில்லை.

ஏற்கனவே மாகாண சபை தேர்தல் நீண்டகாலம் பிற்போடப்பட்டுவிட்டது. இந்த நிலையில் உள்ளூராட்சி மன்றங்களின் காலமும் நிறைவுபெறவுள்ளது. இந்த நிலையில், அடுத்த ஆண்டு ஏதோவொரு தேர்தலுக்கு அரசாங்கம் செல்ல வேண்டியிருக்கின்றது. நாட்டு மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி போடும் பணிகள் நிறைவுற்று, பாடசாலைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்ட பின்னர்தான், தேர்தல் தொடர்பில் சிந்திக்க முடியும். அதேவேளை, தேர்தலுக்கு செல்கின்றபோது, எந்தத் தேர்தலை முதலில் வைப்பதன் மூலம், தங்களை மீளவும் தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பதிலும் அராங்கம் தீவிர கவனம் செலுத்தும்.

ஏனெனில், ‘முதல் கோணல் முற்றிலும் கோணல்’ என்பதுபோல், கொரோனா நெருக்கடிக்கு பின்னரான முதலாவது தேர்தலில் சறுக்கினால், அதன் பின்னர் இடம்பெறும் அனைத்து தேர்தல்களிலும் சறுக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம். இந்த நிலைமைகளைத் துல்லியமாக மதிப்பிட்டே ராஜபக்ஷக்கள் தங்களின் ஆட்டத்தை ஆட முயல்வர். இந்த ஆட்டத்தை எதிர்கொள்வதற்கான வலுவான எதிர் ஆட்டத்தை எதிரணியினர் ஆட வேண்டும். அதற்கான தயாரிப்புக்களில் எதிரணியினர் ஈடுபட வேண்டும். ஆனால், எதிரணியினிரிடம் அதற்கான தயாரிப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

# ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் மீளவும் ‘அசை போடும் படலம்’?

- அலசுவது இராஜதந்திரி -

இன்று ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகின்றது. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிச்சேல் பச்லெட் இன்று இலங்கை தொடர்பான தமது வாய்மூல அறிக்கையை வெளியிடுவார் என எதிர்பர்க்கப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற அடிப்படை மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் மற்றும் இன நல்லிணக்கத்துடன் வடக்கு - கிழக்கு பிரச்னை தொடர்பாக ஓர் அரசியல் தீர்வை எட்டுதல் போன்ற விடயங்களே மனித உரிமைகள் பேரவை ஆணையாளரால் இன்று பெரிதும் குறிப்பிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



இன்று ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பமாகும் தருணத்திலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இலங்கை அரசு பொறுப்புக்கூறல், நீதியை நிலை நாட்டுதல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் போன்றவை தொடர்பாக காலம் தாழ்த்தி வருவதாக குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இலங்கை அரசாங்கம் ஜெனிவா விடயங்கள் தொடர்பாக மட்டுமல்ல. வடக்கு - கிழக்கு பிரச்னையின் ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் காலந்தாழ்த்தி வருவதே வழக்கமாக இருக்கின்றது. இதனை மிகமூத்த அரசியல்வாதி என்ற வகையில் முன்னாள் எதிர்கட்சித் தலைவராகவுமிருந்த இரா.சம்பந்தன் நன்கறிந்திருப்பார் என்றே கருத முடியும்.

ஒவ்வோர் ஆண்டும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூடுவதையும் அங்கு இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக ஆரயப்படுகின்றமையும் வழக்கமாகவே இருந்து வருகின்றது.

**யுத்தம் முடிவுற்று 12 ஆண்டுகள்**

இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்து பன்னிரெண்டு வருடங்களாகியுள்ளன. ஆனால், இதுவரை எவ்வித முன்னேற்றகரமான முறையில் பொறுப்புக்கூறல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்குதல் கற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் இனநல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் என்பவை தொடர்பாக வடக்கு - கிழக்கு மக்களை மாத்திரமல்ல. சர்வதேச சமூகத்தையும் இலங்கை அரசு ஏமாற்றி வருவதையே அவதானிக்க முடிகின்றது.

எனவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வெறுமனே பழையனவற்றை அசை போடுவது நின்றுவிடாது. இலங்கை அரசுக்கு பொறுப்புக்கூறல், நீதியை நிலைநாட்டுதல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் என்பவை தொடர்பாக அழுத்தங்களை வழங்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகமும் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தடவை ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ளதன் பின்னணியிலேயே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக நீதி அமைச்சர் அலி சப்ரி ஒரு கவலைக்குரிய விடயத்தை பொறுப்பற்ற விதத்தில் தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சரின் பொறுப்பற்ற கேள்வி காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டுபிடித்தத் தாருங்கள் என்று தமது உறவுகளைப் பறிகொடுத்தவர்கள் இடையறாது கூக்குரலிட்டுவரும் நிலையில் பாதிக்கப்பட்டவர்களிடமே, “காணாமல் போனவர்களை கண்டுபிடிக்க முடியுமா?” என்று நீதி அமைச்சர் அலி சப்ரி கேள்வி எழுப்பியுள்ளார்.

நீதி அமைச்சரின் இந்தக் கேள்வியை நோக்கும்போது பாதிக்கப்பட்ட மக்கள் இனிமேல் யாரிடம் சென்று முறையிடுவது என்ற கேள்வியே முக்கியமாக எதிரொலிக்கின்றது. இந்தக் கட்டத்திலேயே ஜெனிவா மனித உரிமைகள் பேரவை தனது பங்களிப்பை வழங்க வேண்டியது அவசியமானதாகின்றது.

நீதி அமைச்சர் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக கருத்து வெளியிடுகையில், அனைவரும் இலங்கையர்கள் என்ற ரீதியிலேயே இப்பிரச்னையை அணுக வேண்டுமெனவும் இராணுவத்திலிருப்போரும் காணாமல் போயுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சரின் இக்கூற்று மிகப்பொறுப்பற்றதாகவே இருக்கின்றது. இராணுவத்தினரும் காணாமல் பேரயுள்ளனர் என்று நீதி அமைச்சர் கூறியுள்ளார். ஆனால், யுத்த நடவடிக்கைகளின் போது இராணுவத்தினர் கொல்லப்படுவதும், காணாமல் போவதும் யுத்த கைதிகளாக்கப்படுவதும் வழக்கமான நடவடிக்ககைகளாகும்.

எனவே, ஆயுதப்படையினர் காணாமல் போவது, கொல்லப்படுவது என்பவற்றை அப்பாவி மக்கள் காணாமல் ஆக்கப்படுதல் மற்றும் கொல்லப்படுவதுடன் நீதி அமைச்சர் ஒப்பிடுவது எவ்விதத்திலும் பொருத்தமானதாக அமைய முடியாது.

இந்நிலையில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை உட்பட ஏனைய சர்வதேச சமூக நிறுவனங்களை இலங்கை அரசு மீது அழுத்தங்களை பிரயோகிக்க வைப்பதன் மூலமே இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதோடு அர்த்தமுள்ள நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# இராணுவத்தில் இருந்தவர்கள்கூட மாநில ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்

## காங்கிரஸின் குற்றச்சாட்டுக்கு அண்ணாமலை பதில்

சென்னை, செப். 13,

"உத்தரகாண்டில் நியமிக்கப்பட்டிருக்கும் புதிய ஆளுநர் இராணுவத்தில் இருந்தவர். இதுபோல பல துறைகளில் சாதனை படைத்தவர்களை ஆளுநராக நியமிக்கிறார்கள். அழகிரியைப் பொறுத்தவரை ஐ.பி.எஸ். அதிகாரிகள் எல்லாம் ஆளுநர் பதவி வகிக்க தகுதி இல்லை என்கிறாரா?" என தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்திருக்கின்றார்.

தமிழ்நாட்டின் புதிய ஆளுநராக நாகாலாந்து ஆளுநர் ஆர்.என்.ரவியை நியமித்து குடியரசுத் தலைவர் மாளிகை கடந்த 9 ஆம் தேதி இரவு உத்தரவிட்டது. இதுகுறித்த விமர்சனங்களுக்கு தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை பதிலளித்திருக்கிறார்.

ஆர்.என். ரவியை தமிழ்நாடு ஆளுநராக நியமித்தது பற்றி தமிழக காங்கிரஸ் தலைவர்



கே.எஸ். அழகிரி சந்தேகம் தெரிவித்திருந்தார். தமிழ்நாட்டுக்கு புதிய ஆளுநர் வரும் முன்னதாகவே அவரைப் பற்றி வெளியாகும் இக்கருத்துகளுக்கு தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை நேற்று மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசும்போது பதிலளித்தார்.

"புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவி பொலிஸ் அதிகாரியாக இருந்து பணி ஓய்வு பெற்று உடனடியாக ஆளுநர் ஆக்கப்படவில்லை. அவர் பணி ஓய்வுபெற்ற பிறகு நாகாலாந்தில் அரசுக்கும் பயங்கரவாத குழுக்களுக்கும் இடையிலான பேச்சு நடத்தக் கூடியவராக மத்திய அரசு நியமித்தது. அதை அவர் திறமையாக செய்ததை அடுத்து அவர் நாகலாந்து ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

உத்தரகாண்டில் போட்டிருக்கக் கூடிய புதிய ஆளுநர் கூட இராணுவ அதிகாரியாக இருந்தவர். இதுபோல பல துறைகளில் சாதனை படைத்தவர்களை ஆளுநராக நியமிக்கிறார்கள். அழகிரியைப் பொறுத்தவரை ஐ.பி.எஸ். அதிகாரிகள் எல்லாம் ஆளுநர் பதவி வகிக்க தகுதி இல்லை என்கிறாரா? அழகிரி போன்றவர்கள் ஆளுநர் நியமனத்தில் காழ்ப்புணர்ச்சியோடு அரசியல் செய்வதை கண்டிக்கிறேன்" என்று பதிலளித்துள்ளார் அண்ணாமலை.

# 'தலைவி' படத்தில் சொல்லப்பட்டுள்ள சில விஷயங்கள் உண்மையானதல்ல

## முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் குற்றச்சாட்டு

சென்னை, செப் .13

"தலைவி' படத்தில் சொல்லப்படும் சில விஷயங்கள் உண்மைக்கு புறம்பானவை என்று முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் குற்றம்சாட்டியுள்ளார்.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு உருவான படம் 'தலைவி'. ஏ.எல்.விஜய் இயக்கியுள்ள இப்படத்தில் ஜெயலலிதா கதாபாத்திரத்தில் கங்கனா ரணாவத் நடித்துள்ளார். இவருடன் அரவிந்த்சாமி, மதுபாலா, சமுத்திரக்கனி, நாசர் உள்ளிட்ட பலர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார். இப்படம் செப்ரெம்பர் 10ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இந்நிலையில் இப்படத்தில் சொல்லப்படும் சில விஷயங்கள் உண்மைக்கு புறம்பானவை என்று முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். 'தலைவி' படத்தின் முதல் நாள் முதல் காட்சியைப் பார்த்த ஜெயக்குமார் இது குறித்து



செய்தியாளர்களிடம் கூறியதாவது:

"புரட்சித் தலைவரை பொறுத்தவரை அவர் எப்போதுமே பதவிகளுக்கு ஆசைப்பட்டது கிடையாது. 1967ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர் குண்டடிபட்டு மருத்துவமனையில் இருந்தபோது அவரது புகைப்படத்தை போஸ்டரில் அச்சடித்ததன் மூலம் அண்ணா தலைமையிலான தி.மு.க. மாபெரும் வெற்றி பெற்ற ஆட்சியில் அமர்ந்தது. எம்.ஜி.ஆரால் கிடைத்த வெற்றி என்பதால் அவருக்கு ஏதேனும் ஒரு மந்திரி பதவி கொடுப்பதற்காக பேரறிஞர் அண்ணா அவரை அணுகியபோது எம்.ஜி.ஆர் அதனை மறுத்துவிட்டார். ஆனால் 'தலைவி' படத்தில் எம்.ஜி.ஆர் தனக்கு மந்திரி பதவி கேட்டது போலவும் அதற்கு கருணாநிதி மறுப்பது போலவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அது உண்மை அல்ல.

அதே போல எம்.ஜி.ஆர் என்றைக்குமே ஜெயலலிதாவை சிறுமைப்படுத்தியதில்லை. ஆனால், திரைப்படத்தில் அப்படி ஒரு காட்சி இடம்பெற்றுள்ளது. படத்தில் எங்கள் கட்சிக்கு தி.மு.க. கொடுத்த தொல்லைகள் எதுவும் இடம் பெறவில்லை. என ஜெயக்குமார் கூறியுள்ளார்.

# ரூ.1.33 கோடி மதிப்பிலான தங்கம் பறிமுதல்

சென்னை, செப். 13

சென்னை விமான நிலையத்தில் ரூ.1.33 கோடி மதிப்பிலான கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

சென்னை விமான நிலையத்திற்கு, நேற்று அதிகாலை 2:30 மணிக்கு வந்த 34 வயது மதிக்கத்தக்க ஆண் பயணி மற்றும் காலை 4 மணிக்கு வந்த 35 வயது ஆண் பயணி ஆகியோர் விமான நிலைய வாயிலில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

வருவாய் புலனாய்வு இயக்குநரகத்திடமிருந்து கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அவர்களது உடைமைகளை சோதனையிட்டபோது பைகள், பெட்டிகளின் உள்ளே ரூ.1.33 கோடி மதிப்பில் 3,125 கிராம் எடையில் 11 தங்க கம்பிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை பது கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றை பறிமுதல் செய்த சுங்கத்துறையினர், 2 பயணிகளையும் கைது செய்து, தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.




**மேடம்**
பொறுப்பும் பொறுமையும் இருந்தால் எதையும் சுலபமாக சமாளிக்கலாம். பேச்சிலும் செயலிலும் கவனமாக இருப்போர்க்கு நல்ல நாள். குடும்ப வருமானம் உயர வழிபிறக்கும். பொறுமை கூடும்.

**இடபம்**
அலுவலகத்திலிருந்து வரும் செய்தி ஒன்று சந்தோஷம் தரும். முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கும் நாள். நலம் விரும்பி ஒருவர் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவர்.

**மிதுனம்**
சுறுசுறுப்பாக பணிபுரிந்து பலரின் பாராட்டுகளை பெறுவீர்கள். யோகமான நாள். அதிக சம்பளத்துடன் புதிய வேலை உறுதியாகும். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். செயல் ஒன்று வெற்றி தரும்.

**கடகம்**
சமீபத்தில் ஏற்பட்ட பிரச்னை ஒன்று அகலும். பல நாள் தொடர்ந்த பேச்சு நல்லபடியாக முடியும். தொழில், பணியிடத்தில் உங்கள் வளர்ச்சி திருப்தி தரும் நாள்.

**சிம்மம்**
பணம் வருவதில் இருந்த தடை அகலும். குடும்பப் பொறுப்புக் கூடும். சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உயர்பதவியில் உள்ளவர் ஒருவரிடமிருந்து நல்ல செய்தி வரும்.

**கன்னி**
வெற்றி வாய்ப்பு மகிழ்ச்சி தரும். மாணவர்களுக்கு உயர்வு உண்டு. நிலம், வீடு வாங்கும் யோகம் உண்டு. மகிழ்ச்சியான நாள். நினைத்த நேரத்தில் எதையும் முடிக்கத் தடை ஏற்படும்.

**துலாம்**
நீங்கள் நம்பிய ஒருவர் அனுகூலமாக நடந்து கொண்டு உதவுவார். பல நாளாக இருந்து வந்த மனக்குழப்பம் ஒன்று தீரும். எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினரிடம் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. கையிருப்பு கரைந்தாலும் நிம்மதி ஏற்படும். நட்பு வட்டம் விரியும். பொது விஷயங்களில் ஈடுபாடு வந்து உங்களின் புகழ் கூடும்.

**தனுசு**
நம்பிக்கைக்குரிய தகவல்களை கொண்டு வந்து சேர்க்கும் நாள். நிறுத்தி வைக்கப்பட்ட நன்மைகள் மீண்டும் கிடைக்கும். பொது விஷயங்களில் ஈடுபாடு வந்து மகிழ்வீர்கள்.

**மகரம்**
பற்றாக்குறை இருந்தாலும் குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும் குழந்தைகளின் செயலால் மன மகிழ்ச்சி கிடைக்கும். மாணவர்களின் கல்வி மேம்படும். சேமிப்பில் ஆர்வம் கூடும்.

**கும்பம்**
கடனை எதிர்நோக்கி இருப்பவர்களுக்கு கடன் கிடைக்கும். சொத்து விற்றல், வாங்குதலில் ஆதாயம் உண்டு. கணவன் மனைவி இடையே உறவு சிறப்பாக இருக்கும்

**மீனம்**
உறவினர், நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கவரும் தன்மை அதிகரிப்பதால் ஆதாயமான நாள். வேலைப்பளு அதிகமாக இருந்தாலும் வெற்றி உண்டு.

# சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசி: அடுத்த வாரம் முதல் ஆரம்பம்!

## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண



**கொழும்பு, செப்.13**

**நாட்டில் அடுத்த வாரம் முதல் விசேட தேவையுடைய சிறுவர்களுக்கு பைசர் கோவிட்-19 தடுப்பூசி செலுத்தப்படும் என்று ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.**

சுகாதார அமைச்சின் கூற்றுக்களின்படி 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு மூன்று கட்டங்களாக கோவிட்-19 தடுப்பூசி போடுவ தற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

முதல் கட்டத்தில் நாள்பட்ட நோய்கள் உள்ள சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும். இரண்டாம் கட்டத்தில் உயர்தரம் மற்றும் சாதாரண தரம் மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும்.

மூன்றாவது கட்டத்தில் மீதமுள்ள குறிப்பாக 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும் என்றும் கூறினார்.




# கொற்றாவத்தை மக்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் உதவி!

*வடமராட்சி, செப். 13*

சந்நிதியான் ஆச்சிரமத்தால் கரணவாய் வடக்கு - கொற்றாவத்தை கிராமத்துக்கு அத்தியவசியமான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கோவிட் - 19 இடர்கால நிவாரண உதவித் திட்டத்திற்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு இந்த உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருள்களான அரிசி, மா, சீனி , பருப்பு, தேயிலை உள்ளடங் கலாக இந்தப் பொருட்கள் வழங்கப்பட்டன.

வண. மோகனதாஸ் சுவாமிகளால் சந்திதியான் ஆச்சிரமத்தில் வைத்து கொற்றாவத்தை உப்புக்கிணற்றடி அம்மன் ஆலய நிர்வாகத்திடம் உணவுப் பொருட்கள் கையளிக்கப்பட்டன. பின்னர், இந்தப் பொருட்கள் கொற்றாவத்தை மக்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டன. (ஐ - 02)

# அம்பாந்தோட்டை கடலில் நிலநடுக்கம்!

*கொழும்பு, செப். 13*

அம்பாந்தோட்டையிலிருந்து தென்கிழக்கில் 160 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கடற்பரப்பில் நில நடுக்கம் பதிவாகியிருப்பதாக புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் குறித்த நில நடுக்கம் 4.1 மக்னிரியூட் அளவில் பதிவாகியுள்ளதாக புவிச் சரிதவியல் மற்றும் சுங்கப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன், குறித்த நில நடுக்கம் காரணமாக சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கடலட்டை பிடிக்க கடலில் இறங்கிய மீனவர் மாயம்!

*வடமராட்சி, செப். 13*

வடமராட்சி கிழக்கு - குடாரப்பு கடற்பரப்பில் கடலட்டை பிடிப்பதற்காக கடலில் இறங்கிய மீனவர் ஒருவரைக் காணவில்லை என்று பொலிஸ் நிலை யத்தில் முறையிடப்பட் டுள்ளது.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் குறித்த மீனவர் படகில் சென்று கடலட்டை பிடிப்பதற்காக கடலில் இறங்கியுள்ளார்.

குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் அவருடன் இணைக்கப்பட்டிருந்த கயிற்றை மேலே இழுத்தபோது அவரைக் காணவில்லை என்று படகில் இருந்த ஏனையவர்கள் தெரிவித்துள்ளனர்.

2 நாட்களாகத் தேடியும் அவரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மீனவர் புத்தளம் கற்பிட்டிப் பகுதியை சேர்ந்தவர் என்றும் குடாரப்பு கடற்கரையில் வாடியமைத்து தங்கியிருந்து கடலட்டை பிடித்துவரும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருபவர் களில் ஒருவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-2)

# இ.போ.ச. வடக்கு முகாமையாளராக பெரும்பான்மையினத்தவர் நியமனம்!

*யாழ்ப்பாணம், செப். 13*

இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய முகாமையாளர் (பொறியியல்) பதவிக்கு அநுராதபுரத்தைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கில் இதற்கு இரு சாலைகளின் முகாமையாளர்களுக்கு அதற்கான தகுதி இருந்தபோதும் அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

தற்போது முகாமையாளராக (பொறியியல்) பதவியேற்றவர் திருகோணமலை சாலையின் பொறியியலாளராகக் கடமையாற்றியபோது குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டிருந்தார் என்று ஒழுக்காற்று நடவடிக்கை கடிதங்கள் மூலம் தெரியவருகிறது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளர் (பொறியியல்) பதவியில் இருந்தவர் பதில் பிராந்திய முதன்மை முகாமையாளராக கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்தார். எனினும், பிராந்திய முதன்மை முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதால் வடபிராந்திய முகாமையாளர் (பொறியியல்) பதவியில் இருந்த பொறியியலாளர், தாமாகப் பதவி விலகிச் சென்றார்.

இந்த நிலையில் அந்த வெற்றிடத்துக்கு நியமிப்பதற்கான தகுதியை கோண்டாவில் மற்றும் கிளிநொச்சி சாலை பொறியியலாளர்களுக்கு உள்ளது. எனினும் அவர்களை நியமிப்பதற்கு சாட்டுக்களைக் கூறி திருகோணமலையில் சாலைப் பொறியியலாளராகப் பணியாற்றியவரை வடபிராந் திய முகாமையாளர் (பொறியியல்) பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் தனது கடமைகளை கடந்த 9ஆம் திகதி பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்த நியமனம் தொடர்பில் தொழிற்சங்கங்கள் இடையே குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)



# வல்வெட்டித்துறை கொலை; சந்தேகநபர்களில் ஒருவர் கைது!

*வடமராட்சி, செப். 13*

வல்வெட்டித்துறையில் இரு பிள்ளைகளின் தந்தையை கொன்றவர்கள் என்று கூறப்படும் இரு சந்தேகநபர்களில் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

காங்கேசன்துறை சிறப்பு குற்றத்தடுப்பு பொலிஸார் அளித்த தகவலின் அடிப்படையில் திருகோணமலையில் வைத்து குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கடந்த ஓகஸ்ட் 17ஆம் திகதி வல்வெட்டித்துறை - வல்வெட்டியில், குடும்பத் தகராறு காரணமாக நள்ளிரவு 12.30 இரு பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் கிருசாந்தன் (வயது-30) என்பவர் கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் அவரின் நெருங்கிய உறவினர்கள் இருவர் தலைமறைவாகியிருந்தனர். இவர்களில் ஒருவர் திருகோணமலையில் உள்ளார் என்று காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு தகவல் கிடைத்தது.

கோவிட் - 19 தொற்று காரணமாக குறித்த நபரை காங்கேசன்துறை பொலிஸார் நேரில் கைது செய்ய முடியாத நிலையில், திருகோணமலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தகவலளிக்கப்பட்டது. இதையடுத்து அவர்கள் நேற்று சந்தேகநபரை கைது செய்தனர்.

இதேவேளை, மற்றொரு நபர் தொடர்ந்தும் தலைமறைவாகவுள்ளார். பொலிஸார் அவரைத் தேடி வருகின்றனர். (ஐ -3)

# வவுனியா மருத்துவமனைக்கு நோயாளர் கட்டில்கள் அன்பளிப்பு

*வவுனியா, செப். 13*

வவுனியா பொது மருத்துவமனைக்கு நோயாளர்களுக்கான கட்டில்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொது மருத்துவமனையில் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் அவர்களுக்கான கட்டில்களுக்கான பற்றாக்குறை மற்றும் இடவசதிப் பிரச்னை என்பன ஏற்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், நோயாளர்களுக்கான வசதிகளுடன்கூடிய 3 கட்டில்கள் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் லாவண்யா நகையக உரிமையாளரினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நான்கு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய குறித்த கட்டில்கள் வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் க.ராகுலன், மருத்துவர் மதுரகன் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன. (ஐ)

# அதிவேக பாதை காசாளர் ரூ. 14 இலட்சத்துடன் மாயம்!

கொழும்பு, செப். 13

அதிவேக பாதையின் களனி கம இடைமாறல் அலுவலகத்தில் 14 இலட்சம் ரூபாய் பணம் காணாமல் போயுள்ளதாக பண்டாரகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேசமயம் பொலிஸாரின் விசாரணையில் பணத்துக்குப் பொறுப்பாக செயல்பட்ட காசாளரும் மாயமாகியுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது, அந்த அலுவலகத்தின் காசாளர் ஒருவர் கடமையின் நிமிர்த்தம் பணத் தொகையை சரிபார்த்த போது 14 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் குறைவாக இருந்தது. இது தொடர்பில் அவர் உயரதிகாரிகளுக்கு அளித்த தகவலின் அடிப்படையில் இந்த விடயம் குறித்து பண்டாரகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

உள்ளக ஆய்வின் போது, காசாளர்களின் பெட்டகத்திலிருந்தும், அன்றாட வருமானத்தை வைக்கும் பெட்டகத்திலிருந்தும் பணம் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இதைத் தொடர்ந்து நடந்த பொலிஸ் விசாரணையில், பிரதான காசாளர் ஒருவர் மாயமாகியுள்ளமை தெரிய வந்தது. அவரைத் தேடும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சூதுக்கு அடிமையாகியவர் என நம்பப்படும் குறித்த காசாளர், புளத் சிங்ஹல பகுதியைச் சேர்ந்தவர் எனவும், அவர் வதியும் வீட்டில் அவர் இல்லை எனவும் குறிப்பிட்ட பொலிசார், அவரின் கைபேசியும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## புதிய கல்வி கொள்கை உருவாக்கம்:

# இலங்கை சட்டத்தையும் பாடமாக சேர்க்க திட்டம்!

### கல்வி அமைச்சர் தினேஷ்



கொழும்பு, செப். 13

**புதிய தேசிய கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுவில் கல்வி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலைகளில் வெற்றிடங்களாக உள்ள அதிபர் பணியிடங்களை நிரப்ப சரியான முறையை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

தற்போதைய ஆசிரியர் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பது ஒரு கடுமையான பிரச்னை என்பதை சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் செயல்முறையும் நெறிப்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அத்துடன், தேசிய கல்வியியல் கல்லூரிகளை பல்கலைக் கழகங்களாக மாற்றும் திட்டம் நடந்து வருவதாக கல்வி அமைச்சர் தினேஷ் குண வர்த்தன கூறினார்.

தற்போது அலுவலக மொழிகள் பெரும் வீழ்ச்சியடைந்த நிலையில் இருப்பதாக குழுவின் உறுப்பினர் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டினார்.

பாடசாலை பாடத்திட்டத்தில் இலங்கை சட்டத்தையும் ஒரு பாடமாகச் சேர்ப்பதற்கான தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை இரண்டு வாரங்களுக்குள் சம்பந்தப்பட்ட துணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது என்று கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுவில் தெரியவந்தது.

பாடசாலைகளில் இணைக்கப்பட்ட பட்டதாரி பயிற்சியாளர்களை உறுதி செய்ய சரியான திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற தகவல் தொடர்பு துறை தெரிவித்தது. (ஐ)

# மொடர்னா தடுப்பூசியின் ஆய்வு முடிவு அடுத்த வாரம்!

### ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்




கொழும்பு, செப். 13

மொடர்னா தடுப்பூசியின் எதிர்ப்பு சக்தி தொடர்பான ஆய்வறிக்கை அடுத்த வாரத்தில் வெளியிடப்படும் என்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியல்துறை பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

மொடர்னா தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டவர்களிடம் பெறப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இந்த ஆய்வு நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தீபங்கள் ஏற்றப்பட்டன!



யாழ்ப்பாணம், செப். 13

சிறைக் கைதிகள் தினத்தை முன்னிட்டு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும்விதமாக - அவர்களின் வாழ்வை ஒளியூட்டுவதை பிரதிபலிக்கும் விதமாக யாழ்ப்பாணத்தில் நேற்று தீபங்கள் ஏற்றப்பட்டன.

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் குருநகரில் உள்ள அலுவலகத்தின் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அரசியல்கைதிகளின் வாழ்வில் ஒளியூட்டுவதை பிரதிபலிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டதாக அந்த அமைப்பினர் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து அந்த அமைப்பினர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

நீதிமன்றங்களிலும் வழக்குக் கோவைகள் குவிந்து கிடக்கின்றன. வழக்கு நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்படுமென நீதி அமைச்சு தெரிவித்து வருகின்ற போதிலும் பெரும்பாலான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படாமல் நீண்ட கால தவணைத் திகதியிடப்பட்டு வருவதையே அவதானிக்க முடிகிறதென கூறப்பட்டது.

மேலும், நாட்டிலுள்ள 26 சிறைச்சாலைகளில் சுமார் 20 ஆயிரத்து 228 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். உண்மையில் நாட்டின் சிறைக் கட்டமைப்பின் பிரகாரம் சுமார் 12 ஆயிரம் கைதிகளை மாத்திரமே தடுத்து வைத்துப் பராமரிக்க முடியும் என சிறைத்துறை தலைமையகம் தெரிவிக்கின்றது. நாட்டுக்குள் அன்றாடம் அதிகரித்துச்செல்கின்ற குற்றச்செயல்கள் காரணமாகவே சிறைக்கூடங்கள் நிரம்புகின்றன என்று கூறிவிட்டு வெறுமனே ஒதுங்கிவிட முடியாது.

வளப்பற்றாக்குறைகளை கோடிட்டுக் காட்டிக்கொண்டிருக்கும் சட்டம், மற்றும் நீதித்துறையின் தாமதம் கைதிகளுக்கான நிவாரணத்தைப் பெற்றுக்கொடுப்பதிலிருந்து தூரமாகவே நிற்கிறது. சட்டத்துறை காரியாலயத்திலும் நீதிமன்றங்களிலும் வழக்குக்கோவைகள் குவிந்து கிடக்கின்றன. வழக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப் படுமென நீதி அமைச்சு தெரிவித்து வருகின்ற போதிலும் பெரும்பாலான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படாமல் நீண்டகால தவணைத்திகதியிடப்பட்டு வருவதையே அவதானிக்க முடிகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் நாட்டின் எதிர்காலம் அச்சுறுத்தலில்!

### பிரதான எதிர்க்கட்சி குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 13

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கைக்கு வழங்கிய கால அவகாசத்தை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வில்லை. இதனால் ஐ.நா.வில் இலங்கைக்கு எதிராக தொடர்ச்சி யாக பிரேரணைகளை நிறை வேற்றக் கூடிய வாய்ப்புக்களே அதிகமுள்ளன. இது நாட்டின் எதிர்காலத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டோருக்கு நியாயம் கோரி பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை சர்வதேசத்தை நாடுவதற்கு எடுத்துள்ள தீர்மானம் எவ்விதத்திலும் தவறாகாது.

அரசாங்கத்தின் செயல்பாடுகள் மீது ஏற்பட்ட நம்பிக்கையின்மையின் காரணமாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் அண்மைக்காலமாக இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தவறுகளை திருத்திக் கொள்வதற்கு கால அவகாசத்தை வழங்கியது.

எனினும், அரசாங்கம் அதனை கவனத்தில் கொள்ள வில்லை. இதனால் 2015 ஆம் ஆண்டுக்கு முன்னரைப் போன்று இலங்கைக்கு எதிராக தொடர்ச்சியாக பிரேரணைகளை நிறைவேற்றக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. இது நாட்டின் எதிர்காலத்தில் பாரிய அச்சுறுத்தலாக அமையும்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# புதுக்குடியிருப்பில் டெல்டா திரிபு பரவல்!

## ஐந்து தொற்றாளர்கள் அடையாளம்

முல்லைத்தீவு, செப்.13

**முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கொரோனா தொற்றின் டெல்டா திரிபுடன் 5 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.**

இதற்கமைய, வடக்கு மாகாணத்தில், 113 பேருக்கு டெல்டா வைரஸ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இனங்காணப்பட்ட டெல்டா தொற்றாளர்களில் இரண்டு பொலிஸார் மற்றும் 3 பிரதேசவாசிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒகஸ்ட் மாதத்தில் மட்டும் 25 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்தனர் என்று மாவட்ட வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் உடலங்கள் எவையும் தேங்க விடப்படவில்லை. அனைத்து உடலங்களும் கட்டம் கட்டமாக வவுனியா, பொலநறுவை ஆகிய இடங்களுக்கு அனுப்பப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளன.

இன்னும் நான்கு உடலங்கள் பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகாக காத்திருக்கின்றன என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

மேலும், முல்லைத்தீவு - விசுவமடு, பத்தாம் கட்டைப் பகுதியில், கடந்த 9ஆம் திகதியன்று, வீட்டில் வைத்து உயிரிழந்த நருக்கு கொரோனா தொற்று உறுதிபடுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# தொற்றிலிருந்து விடுபட வேண்டி கிளிநொச்சி ஆலயத்தில் யாகம்!

கிளிநொச்சி, செப். 13

கொடிய தொற்று நோயிலிருந்து நாடு விடுபட வேண்டி கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலயத்தில் பெரும் யாக சாந்தி பூசை நேற்று இடம்பெற்றது.

நேற்று காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை இந்த யாகம் நடைபெற்றது.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வளர்க்கப்பட்ட இந்த யாகத்தில் மிகக்குறைந்தளவான பக்தர்களை பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். (ஐ)

# கோட்டாபயவின் ஆட்சியை மக்கள் வெறுக்கிறார்கள்!

## முருத்தெட்டுவ தேரர்

கொழும்பு, செப். 13

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியை நாளுக்கு நாள் மக்கள் வெறுக்கிறார்களே தவிர விரும்பவில்லை. இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கிய நிலையை தற்போது உணர்கிறோம்.

நாட்டுக்கு கடவுளின் சாபமா என்ற எண்ண தோன்றுகிறது. இராணுவத்தினால் அரச சேவைகளை முன்னெடுத்தால் பெரும் பாதிப்பு ஏற்படும் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவ ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அபயராமை விகாரையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுபீட்சமான இலக்கு கொள்கை செயல்திட்டத்தை செயல்படுத்துவதாக குறிப்பிட்டாலும் மக்கள் மத்தியில் சுபீட்சமான இலக்கு கொள்கை தொடர்பில் நல்ல நிலைப்பாடு ஏதும் கிடையாது.

தற்போதைய நிலைமை நாட்டுக்கு கடவுள் விடுத்த சாபமா அல்லது கடவுளின் கோபமா என மக்கள் எம்மிடம் வினவுகிறார்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வருகையை மக்கள் மங்களமாக கொண்டாடினார்கள். ஆனால், இன்று அமங்களமாகிவிட்டது என கருதுகிறார்கள்.

முக்கிய அரச பதவி வகிப்பவர்கள் சுய விருப்பத்துடன் பதவியை துறக்கிறார்கள். பிறிதொரு தரப்பினர் அனைத்தையும் சகித்துக் கொண்டு ஒதுங்கி நிற்கிறார்கள். மத்திய வங்கியின் ஆளுநர் பெரும் மன வேதனையுடனும், குழப்பத்துடனும் உள்ளார். இராணுவத்தினர் இராணுவ செயல்பாடுகளை விடுத்து அரச சேவைகளை முன்னெடுத்தால் பெரும் நெருக்கடி நிலை ஏற்படும்.

நாட்டை முன்னேற்றும் தலைவர் தேவை என்றே ஜனாதிபதி தேர்தல் காலத்தில் முன்னின்று செயல்பட்டோம். தேர்தல் காலத்தில் குறிப்பிட்டவை முற்றிலும் தலைகீழாக இன்று செயல்படுத்தப்படுகிறது.

இலங்கை சீன காலனித்துவ நாடாகும் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டோம்.அது இன்று நிறைவேறுகிறது. தேசிய வளங்கள் ஒவ்வொரு தரப்பினருக்கும் பிரித்து கொடுக்கப்படுகிறது. இந்நிலை தொடர்ந்தால் நாடு என்னவாகும்.

மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதையை போன்ற நிலை தற்போது காணப்படுகிறது. அதுமாத்திரமல்ல இஞ்சி கொடுத்து மிள காய் வாங்கிய நிலையை தற் போது உணர்கிறோம் - என்றார். (ஐ)

## தடுப்பூசி பெறுவதில் சிரமம்

# தொற்றுநோயியல் பிரிவினரிடம் கல்விதுறையினர் தெரிவிக்கலாம்

கொழும்பு, செப். 13

ஆசிரியர்கள், பாடசாலை கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் கல்வித்துறை நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள 20 வயதிற்கு மேற்பட்ட யாரேனும் கோவிட் -19 தடுப்பூசிகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டால், இந்த விடயத்தை நேரடியாக சுகாதார அமைச்சுக்கு அல்லது தொற்றுநோயியல் பிரிவுக்கு தெரிவிக்க வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தலைமையில் பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பான தீர்மானங்களை எடுக்க நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு இந்த விடயத்தில் நீண்ட நேரம் கலந்துரையாடியதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சந்திப்பின் போது, பாடசாலை போக்குவரத்து சேவைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் நடத்துபவர்கள் உட்பட பாடசாலை நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து நபர்களுக்கும் தடுப்பூசி போட வேண்டியதன் அவசியத்தையும் உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மாணவர்களுக்கு தடுப்பூசி போடுவது மற்றும் பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்த தொழில்நுட்பக் குழு அறிக்கை வெள்ளிக்கிழமைக்குள் கோவிட் -19 தொடர்பான ஜனாதிபதி பணிக்குழுவில் சமர்ப்பிக்கப்படும் என்று நம்புவதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)



# 100 வயது மூதாட்டிக்கு வவுனியாவில் தடுப்பூசி!

வவுனியா, செப். 13

100 வயதான மூதாட்டி ஒருவருக்கு நடமாடும் சேவைப் பிரிவினரால் வவுனியா நெடுங்கேணியில் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது.

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த நாட்டு மக்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படுகின்றது. இந்த நிலையில் வயது முதிர்ந்தவர்களுக்கு வீடுகளுக்கு சென்று தடுப்பூசி போடும் செயல் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. நெடுங்கேணி, மருதோடை கிராமத்தில் வசிக்கும் 100 வயதான மூதாட்டி தடுப்பூசி போட விரும்புகிறார் என்று கூறியதற்கிணங்க வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரின் நடமாடும் தடுப்பூசி சேவையினரால் நேற்று முன்தினம் தடுப்பூசி போடப்பட்டது. (ஐ)

# சஹ்ரானுடன் தொடர்பை பேணிய ஒருவர் பொலநறுவையில் கைது!

பொலநறுவை, செப். 13

உயித்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதலில் உயிரிழந்த பிரதான சூத்திரதாரியான சஹ்ரானுடன் தொடர்பை பேணி வந்த குற்றச்சாட்டில் பொலநறுவை தம்பானை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரை பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக தொடர்ந்து முன்னெடுத்து வரும் விசாரணையின்போது குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த உவைஸ் சைபூல் ரகுமான் என்பவர் சஹ்ரானுடன் தொடர்புகளை பேணி வந்ததுள்ளார் என தெரியவந்தது.

இதையடுத்து, குறித்த நபரை அவரின் வீட்டில் வைத்து பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட குறித்த நபரை தடுத்துவைத்து விசாரணைகள் மேற்கொண்டுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# அதிக விலையில் பொருள் விற்பனை நல்லூர் ப.நோ.கூ. சங்கம்மீது வழக்கு!

யாழ்ப்பாணம், செப். 13

அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டின் கீழ், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவு சங்க கிளைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் கிளை ஒன்றில், ஒரு கிலோ கிராம் சீனி 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

இதன் பிரகாரம், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து, குறித்த பலநோக்குக் கூட்டுறவு சங்க கிளைக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளனர். (ஐ)

# தமிழ் கட்சிகளின் கடிதப்போர் ஜெனிவாவில் தாக்கத்தை ஏற்படுத்துமா?

● பனங்காட்டான்

ஜெனிவா - இலங்கை நெடுஞ்சாலை கடந்த சில நாட்களாக மிகவும் நெரிசலாக காணப் படுகிறது. இன்று மனித உரிமைகள் ஆணையத்தின் நாற்பத்தெட்டாவது கூட்டத்தொடர் ஆரம்பமாவதே இதற்குக் காரணம்.

இந்த அமர்வின் முதல் நாளான இன்று மனித உரிமை ஆணையாளர் மிச்சேல் பச்லெற் அம்மையார் இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கையை சமர்ப்பிப்பார். இதற்கான இலங்கை அரசின் பதிலை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மெய்நிகர் வழியாக வழங்குவார்.

இதற்கு நிகராக, இலங்கையில் தமிழர் தரப்பிலிருந்து ஏட்டிக்குப் போட்டியாக பல கடிதங்கள் சமர்ப்பணங் கள் என்ற பெயரில் பறந்து கொண்டிருக்கின்றன. கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட 46:1 இலக்கத் தீர்மானம், இலங்கை அரசு நிறைவேற்ற வேண் டிய பல முக்கிய விடயங்களை கோடிட்டுக் காட்டியது. இலங்கையினால் ஜீரணிக்க முடியாதவையாக இவ்விட யங்கள் அமைந்திருந்தன.

போர்க்குற்ற பொறுப்புக்கூறல், சர்வதேச நீதி விசார ணைப் பொறிமுறை என்பவைகளை நிறைவேற்றவென இலங்கையின் அனுசரணையுடன் ஐந்தாண்டுகளுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலிருந்து விலகிக் கொள்வதாக கோட்டாபய அரசு அறிவித் ததையடுத்து உருவான புதிய களத்தில் 46:1 இலக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குறிப்பிட்டுச் சொல்வதானால், ஆணையா ளர் பச்லெற் நேர்மையாக முன்வைத்த விடயங்களின் அடிப்படையில், பிரித்தானியா தலைமையில் கனடா உட்பட ஐந்து நாடுகள் முன்வைத்த இத்தீர்மானத்தில், முதன்முறையாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான பதின் மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பது சேர்க்கப்பட்டிருந்தது.

இந்தியாவின் வேண்டுதலால் இது சேர்க் கப்பட்டதாயினும் தீர்மான நிறைவேற் றலில் இந்தியா வாக்கெடுப்பில் பங்குபற் றாது நடுநிலை என்ற பெயரில் ராஜரீக நகர்வை மேற்கொண்டிருந்தது.

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஆறு மாத காலத்துக்குள் சம்பந்தப்பட்ட தரப்பு எதனை நிறைவேற்றியிருக்க வேண்டும் என்பது முக்கியமா னது. அது இலங்கை அரசைச் சுட்டுவது. அதேசமயம் தமிழர் தரப்புக்கும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கும் சில பங்குண்டு.

முன்னைய சில பத்திகளில் குறிப்பிட்டது போன்று, ஜெனிவாவை மையப்படுத்தியே ஜீ.எல்.பீரிஸ் ஒரு மாதத் துக்கு முன்னர் வெளிவிவகார அமைச்சராக் கப்பட்டார். 2002 - 2004 ஆண்டு காலப் பகுதியில் விடுதலைப் புலிக ளுடன் ரணில் அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்தியபோது, ரணில் தரப்புக் குழுவின் தலைவராகப் பங்கேற்று சர்வதேசத்துக்கு அறிமுகமான வர் பீரிஸ். அதுமட்டுமன்றி சிங்களத்தின் குரலாக எப் போதுமே தம்மை அவர் வெளிக்காட்டி வந்ததால் இப் போது அவர் கோட்டாபய அரசுக்குத்தேவைப்பட்டார்.

இப்பதவியை ஏற்ற நான்கு வாரங்களுக்குள் அமெ ரிக்கா, ரஷ்யா, சீனா உட்பட பதினைந்துக்கும் அதிக மான வெளிநாட்டுத் தூதுவர்களையும், ஐரோப் பிய ஒன்றியத்தின் செயலாளரையும் பீரிஸ் சந்தித்து உரையா டினார். அமெரிக்க தூதுவருடனான சந்திப்பில் தம்முடன் கூட்டமைப்பின் சுமந்திரனையும் பங்குபெறச் செய்தது இவரின் அரசியல் சாணக்கியம்.

இதன் தொடர்ச்சியாக கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிரந்தரப் பிரதிநிதியையும் சந்தித் தார். இச்சந்திப்புகள் ஜெனிவாவில் இந்த மாதம் இலங்கை சமர்ப்பிக்கவிருக்கும் அறிக்கை தொடர்பான உரையா டல்களை மையப்படுத்தியது.

கோட்டாபய ஆட்சியில்காணாமல்ஆக்கப்பட்டோருக்கு செயலகம் உருவாக்கப்பட்டது, காணாமல் ஆக்கப்பட் டோரின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை சர்வதேச நியமங்க ளுக்கு ஏற்ப திருத்தி யமைப்பது, அரசியல் கைதிகள் விசாரணை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நட வடிக்கைகளுக்கென ஆலோசனைக் குழு நியமிக்கப்பட் டது போன்றவைகள் ஜெனிவாவை ஏமாற்றும் அடிப் படை நடவடிக்கைகள் என்பது மேற்குலகுக்கு புரியாததல்ல.

எனினும், இவ்விடயங்களை ஜெனிவாவுக்கு சாதகமாக் கும் பதின்மூன்று பக்க அறிக்கையொன்றை அமைச் சர் பீரிஸ் அனுப்பியுள்ளார். இதன் பிரதிகள் இலங்கையி லுள்ள சகல வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் வழங்கப் பட்டது. தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிர்மூல மாக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை, எவரையும் இலகுவாக நம்ப வைத்து ஏமாற் றக்கூடியது.

தமிழர் பிரதேச காணிகள் பங்களிப்பு நிர்வாகமானது தமிழ் அரசாங்க அதிகாரிகளின் மேற்பார்வையிலேயே நடைபெறுகின்றன என்றும், மனித உரிமைகள் தொடர் பான விசாரணைகள் நீதிமன்றங்களுூடாகவே இடம்பெறு கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை யில், ஒற்றையாட்சி அமைப்பை தமிழர்கள் ஏற்றுள்ளனர் என்பது அழுத்திக் கூறி நிறுவப் பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் பிளவுபடாத இலங்கை என்கின்ற ஒற்றை ஆட்சியில் இருப்பதற்கு மீண்டும் மீண்டும் உறுதியளித்து வந்ததை ஆதாரமாக வைத்தே இந்த வார்த்தைப் பிரயோகம் ஜெனிவாவுக்கான அறிக்கையில் புகுத்தப்பட்டுள்ளது (இது ஜெனிவாத் தீர்மானத்தில் பதின்மூன்றாம் திருத்தத்தை நடைமுறைப் படுத்த வேண்டுமென்ற கோரிக்கைக்கான நேரடிப் பதில்).

பிளவுபடாத இலங்கைக்குள் என்ற அறிவிப்பை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், அவரின் லெப்ரி னன்ட்டாக இருக்கும் சுமந்திரனும் தொடர்ந்து தெரி வித்து வருவதை, கோட்டாபய அரசு தரப்பு தமக்குச் சாதகமாக்கிக் கொண்டுள்ளதை இங்கே அவதானிக்க முடிகிறது.

இந்தச் சூழ்நிலையில் தமிழர் தரப்புகள் - முக்கிய மாக, தமிழ்த் தேசியத்தை தமது பெயரில் முன்னிறுத்தி யுள்ள கட்சிகள் ஒன்றுபட்டு ஒரே குரலில் தங்கள் நியாயப்பாடுகளையும், கோட்டாபய அரசின் நீதிக்குப் புறம்பான - எதேச்சதிகார - இனப்பாகுபாடான - பயங்கரவாத தொடர் செயற்பாடுகளையும் ஜெனிவா வின் முன்னால் சமர்ப்பிப்பரென தமிழ் மக்கள் நம்பிக் கையோடு எதிர்பார்த்திருந்தனர்.



ஆனால், நடந்ததோ எதிர்மாறானது. ஆயுதங்கள் உறைநிலைக்குச் சென்ற பின்னரான பன்னிரண்டு ஆண்டுகளாக சிங்கள ஆட்சியாளர்கள் தமிழரை எத்தி யும் ஏமாற்றியும் மேற்கொண்டு வரும் மனிதாபிமானத் துக்கு எதிரான செயற்பாடுகள் இம்முறை அரங்கேற வில்லை. தமிழர் தரப்பு தாறுமாறாக தங்களுக்குள் பிளவுபட்டு, ஜெனிவாவின் முன்னால் தங்கள் இயலா மையை நிர்வாணமாக காட்டி நிற்கின்றது.

தமிழ்அரசு, ரெலோ, புளொட் என்பவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரில் ஓர் அணி. ஈ.பி.ஆர்.எல். எவ்., சிறிகாந்தா - சிவாஜிலிங்கம் தரப்பு, அனந்தி சசிதரன் தரப்பு என்பவை விக்னேஸ்வரன் தலைமையி லான தமிழ் மக்கள் தேசிய முன்னணி என்ற பெயரில் இன் னோர் அணி. தமிழ் காங்கிரஸ் கட்சியைக் கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கஜேந்திரகுமார் தலை மையில் மற்றோர் அணி. இவை மூன்றுமே தமிழ்த் தேசி யம் என்ற பெயரில் தம்மை அடையாளப் படுத்தி நிற்பவை.

கடந்த இரண்டு மூன்று வாரங்களுக்குள் கூட்ட மைப்பு பகிரங்கமாக இரண்டாகியுள்ளது. செல்வம் அடைக்கலநாதனின் ரெலோவும், சித்தார்த்தனின் புளொட்டும் ஒன்றிணைந்ததுடன் நின்றுவிடாது விக் னேஸ்வரனின் கூட்டணியுடனும் இணைந்து ஜெனி வாவுக்கு தனியாக ஒரு கடிதத்தை அனுப்பியுள்ளன.

சில மாதங்களுக்கு முன்னர் சகலரையும் இணைத்து இயங்கவென முயற்சியெடுத்த ரெலோ, திடுதிப்பென பல்டி அடித்து, தமிழ்அரசை தனியே நிற்க வைத்துவிட்டு புளொட்டோடு சேர்ந்து விக்னேஸ்வரனின் கூட்டணி யுடன் சங்கமமாகி விட்டது.

இது தமிழ்அரசுக் கட்சியினரை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. ஏற்கனவே கூட்டமைப்பிலிருந்து பிரிந்த வர்களோடு, கூட்டமைப்பில் இருந்தவாறே ரெலோவும், புளொட்டும் இவ்வாறு இணைந்துள்ளதை அவர்களால் நம்பவே முடியவில்லை.

அதேசமயம் தமிழ்அரசுக் கட்சியின் ஒரு தரப்பினர் - சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கலையரசன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களோடு மொத்தம் ஒன்பது பேர் தனியாக ஒரு கடிதத்தை ஜெனிவாவுக்கு அனுப்பிய தும் தெரியவந்துள்ளது. இவ்விடயம் சம்பந்தப்பட்டவர் களால் மறுக்கப்பட்டபோதிலும் உண்மையிலேயே கடிதம் அனுப்பப்பட்டதென்பது நிரூபணமாகியுள்ளது.

இவையெல்லாவற்றுக்கும் அப்பால் கூட்டமைப்பின் தலைவர் என்ற பெயரில் சம்பந்தனும் ஒரு கடிதத்தை ஜெனிவாவுக்கு அனுப்பியுள்ளார். சுமந்திரனால் தயாரிக் கப்பட்ட இக்கடிதத்தில் சம்பந்தன் மட்டுமே ஒப்பமிட் டுள்ளார். கூட்டமைப்பின் மற்றைய எம்.பி.க்கள் பெயர்கள் இக்கடிதத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறதே தவிர ஒப்பமிடப்படவில்லை. தமிழ்அரசுக் கட்சியின் தலைவர் என்கிற பெயரில் மாவை சேனாதிராசாவின் பெயரும் இதில் இடம்பெற்றுள்ளது. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோவும் புளொட்டும் இணைந்து தனியான கடிதம் அனுப்பிய பின்னர், கூட்டமைப்பின் பெயரில் சம்பந்தன் இக்கடிதம் அனுப்பியிருப்பது பலருக்கும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசிய முன்னணி வழமைபோல ஜெனிவா வுக்கு தனிக்கடிதத்தை அனுப்பியுள்ளது. ஜெனிவாவின் 46:1 தீர்மானத்தினால் தமிழ் மக்களுக்கு எந்த நீதியும் கிடைக்காது என்பதால் இதனை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்துமாறு முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமாரும் செயலாளரான கஜேந்திரனும் ஒப்பமிட்டு இதனை அனுப்பியுள்ளனர்.

இவை அனைத்துக்கும் மேலாக, மிகமிக முக்கிய மான ஒன்றாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் விக்னேஸ்வரன் இந்த வாரத்துப் புதன்கிழமை ஜெனிவாவுக்கு அனுப்பிய கடிதம் அரசியல் தரப்புக ளால் பார்க்கப்படுகிறது. அமைச்சர் பீரிஸ் ஜெனிவா வுக்கு அனுப்பிய பதின்மூன்று பக்க ஆவணத்துக்கு பதிலளிப்பதாக மட்டுமன்றி, அதிலுள்ள பொய்களை யும் புனைவுகளையும் புட்டுக்காட்டுவதாக இக்கடிதம் அமைந்துள்ளது.

தமிழ்த் தேசிய கட்சிகளின் ஜெனிவா கடிதங்கள் பற்றி விலாவாரியாக தமிழ் ஊடகங்கள் விரித்து வருவதனால் இவை பற்றி இங்கு மேலும் சிலாகிக்க வேண்டிய தில்லை. தங்கள் சொந்த அரசியலுக்காக வும், தங்களின் எதிர்கால இருப்புக்காக வும் சுய இச்சை கொண்ட இவர்கள் வெவ்வேறு அணிகளாக பிளவுபட்டு நிற்பதால் ஜெனிவாவில் எதனையும் சாதிக்க முடியாது.

தமிழர் தரப்பின் பிளவுகளால் ஏற்படக்கூடிய தீமைகளைப் புரிந்து கொள்ள முடியாத நிலையிலுள்ள கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், ஜெனிவாவை பயன்படுத்திக் கூட்ட மைப்பை எவராலும் பிரிக்க முடியாது என்று கருத்து வெளியிட்டிருப்பது விந்தையானது. சிலவேளைகளில் முதுமை காரணமாக நிலைமையை உணராது (கூட்ட மைப்பு பிளவுபட்டிருப்பதை) தூக்கத்திலிருந்தவாறு இவ்வாறு கூறுகிறாரோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

கூட்டமைப்பின் தற்போதைய நிலை தொடர்பாக ஈழத்தமிழர் நட்புறவு மையத்தின் தலைவர் கவிஞர் காசி ஆனந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் - கூட்டமைப்பை உருவாக்கியவர்களும், தங்கள் இயக்கத்தின் பேராதர வோடு அதனை வளர்த்தவர்களும் விடுதலைப் புலிகள். இப்போது அதன் தலைக்கு கிடா மார்பில் பாய்வதுபோலுள்ளது. யாரோ ஓர் அழுகிய சட்ட மூளை உங்க ளைக் குழப்பு கிறது. அந்தக் கெட்ட மூளையை கூட்ட மைப்புக்கு வெளியே தூக்கிப் போடுங்கள், என்று கோரு வதை எவரும் தட்டிக் கழிக்க முடியாது. அந்த அழுகிய மூளை யார் என்பதை சொல்ல வேண்டிய தேவையும் இல்லை.

46:1 தீர்மானத்தின்படி இந்த மாதம் பதின்மூன்றாம் திகதி ஆரம்பமாகும் அமர்வில் மனித உரிமை ஆணை யாளர் இலங்கையின் பொறுப்புக்கூறல் உட்பட்ட இலங்கையின் மனித உரிமைகள் நிலைப்பாடு தொடர் பான வாய்மூல அறிக்கையை சமர்ப்பிப்பார்.

அடுத்த வருட மார்ச் மாத நாற்பத்தியொன்பதாவது அமர்வின்போது இது தொடர்பான எழுத்து மூல அறிக்கையை ஆணையாளர் சமர்ப்பிப்பார்.

அதனைத் தொடர்ந்து, அடுத்த வருட செப்ரெம்பர் மாத ஐம்பத்தோராவது அமர்வில் பொறுப்புக்கூறலை மேலும் மேம்படுத்தக்கூடிய நிலைமைகளை உள்ளடக் கிய பூரண அறிக்கையை எழுத்து வடிவில் ஆணையா ளர் சமர்ப்பிப்பார். அவ்வேளை இது தொடர்பான உரையாடலும் இடம்பெறும்.

இன்று பிரிந்து பிளவுபட்டு ஒன்றையொன்று வெட்டி வீழ்த்தும் வகையில் ஜெனிவாவுக்கு கடிதம் அனுப்பி ஒருவர் காலை இன்னொருவர் இழுத்து வீழ்த் தும் தமிழ்த் தேசிய கட்சிகளை - அதன் தலைமை களை ஒரு குடையின் கீழ் கொண்டு வரக்கூடிய எவராவது ஒருவர் இப்போது அவசியமாகிறார்.

இதனை நிறைவேற்றத் தவறின், ஜெனிவாவை தமிழ்க் கூத்தாடிகள் தங்களின் சுய இச்சைக்கான களமாகவே தொடர்ந்து பயன்படுத்துவர். இது போர்க்குற்றம் புரிந்த - தொடர்ந்து பயங்கரவாத செயல்களில் ஈடுபடுகின்ற சிங்களத் தரப்பு தப்பிச்செல்ல வாய்ப்பளிக்கும். ■

# சர்வதேச விண்வெளி நிலையத்தில் கரும்புகை

**“சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து வெளியேறி தமது சொந்த விண் வெளி நிலை யத்தை கட்டமைக்க ரஷ்யா ஆர்வம் காட்டி வருகிறது. ஆனால், ஆக்கபூர்வ முடிவு எதையும் அந்த நாட்டு அரசு வெளிப்படையாக இன்னும் அறி விக்கவில்லை. தற்போ தைக்கு சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஏழு வீரர்கள் உள்ளனர். அதில் இரண்டு பேர் ரஷ்யாவின் காஸ்மோனாட் டுகள். மூன்று பேர் அமெ ரிக்கர்கள், பிரான்ஸ் மற்றும் ஜப்பானைச் சேர்ந்த தலா ஒரு வர் உள்ளனர்.”**



## அபாய ஒலி எழுப்பிய வீரர்கள் - என்ன நடந்தது?

சர்வதேச விண்வெளி நிலையத்தில் பிளாஸ்ரிக் கருகும் வாசனை வருவதாக அதன் ரஷ்ய பகுதி யில் இருந்த வீரர்கள் கூறியதையடுத்து, அபாய சங்கு ஒலிக்கப்பட்டது. இது தொடர்பாக ரஷ்ய கலனில் இருந்து அமெரிக்காவின் நாசா கலனில் இருப்பவர் களுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

சில மணி நேரத்தில் இந்த பிரச்னை சரி செய்யப் பட்டு விட்டதாக ரஷ்ய விண்வெளி அமைப்பான ராஸ்கோமாஸ் தெரிவித்துள்ளது.

கருகும் வாசனை வந்தபோது விண்வெளி நிலையத்தின் பேட்டரிகள் சார்ஜ் செய்யப்பட்டுக் கொண்டிருந்ததாகவும் அப்போது புகை எழுந்ததா கவும் ரஷ்ய விண்வெளி நிலையமான ராஸ்கோமாஸ் தெரிவித்துள்ளது.

அந்த பிரச்னை சரி செய்யப்பட்டு தற்போது இயல் புநிலை திரும்பி விட்டதாகவும் ராஸ்கோமாஸ் கூறி யுள்ளது. தற்போது விண்வெளி வீரர்கள் தங்களுடைய வழக்கமான பயிற்சிக்கு திரும்பி விட்டனர் என்றும் அந்த அமைப்பு கூறியிருக்கிறது.

சில மாதங்களுக்கு முன்பு ரஷ்யாவில் இருந்து நௌகா என்ற புதிய கலன் விண்வெளி நிலையத்துக்கு வழங்கப்பட்டது. அதை இயக்கும் பணிகளில் ரஷ்யா வின் காஸ்மோனாட்டுகள் என அழைக்கப்படும் அந் நாட்டு விண்வெளி வீரர்கள் ஈடுபடுவார்கள் என்றும் ரஷ்ய அரசு ஊடகம் தெரிவித்திருந்தது.

**ரஷ்ய மாட்யூலில் என்ன பிரச்னை?**

இன்று வெளிப்பட்ட கரும்புகை, ரஷ்யா உருவாக் கிய ஸ்வெஸ்டா மாட்யூல் எனப்படும் வசிப்பிட வசதி கொண்ட அமைப்பில் இருந்து வந்ததாக ரஷ்ய ஊடக செய்தி கூறுகிறது. இந்த “மாட்யூல்“ 2000ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் தேதி சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைக்கப்பட்டது.

43 அடி நீளம், 13.5 அடி அகலம் கொண்ட இந்த மாட்யூலின் எடை சுமார் 2.25 தொன் இருக்கும். இதன் அசைவுகளுக்காக இரண்டு எஞ்சின்கள் இரு புறமும் பொருத்தப்பட்டுள்ளன. இதற்கான மின்சாரம் 97.5 அடி கொண்ட சூரிய தகடு விசிறி மூலம் உற்பத்தி யாகிறது. இதுதான் சர்வதேச விண்வெளி நிலையத் துக்கு ரஷ்யா வழங்கிய முழுமையான சுய தயாரிப்பு அமைப்பாக நாசா கூறுகிறது.

விண்வெளியில் மனிதர்கள் வாழ்வதற்கான வசதிகளை நோக்கமாகக் கொண்டு வடிவமைக் கப்பட்ட இந்த மாட்யூலில் வசிப்பிட அறை, உயிர் காக்கும் சிகிச்சை சாதனங்கள், மின்சார விநியோக அமைப்புகள், டேட்டா ப்ராசஸிங் எனப்படும் தரவுகளை பூமியில் உள்ள கட்டுப்பாட்டு அறைக்கு இணைக்கும் கேபிள்கள், எஞ்சின் இயங்குதள வசதி போன்றவை உள்ளன.

இவை அனைத்தும் பூமியில் உள்ள விண்வெளி நிலைய கட்டுப்பாட்டு அறையில் இருந்தபடி ரிமோட் மூலம் இயக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த மாட்யூலில் ரஷ்யாவின் சோயஸ் விண்கலனை இணைக்கும் பகுதியும் எதிர்காலத்தில் மேம்பட்ட விண்கலனை இணைக்கும் வசதியும் உள்ளன.

சர்வதேச விண்வெளி நிலையத்தின் ஆயுள் இருபது ஆண்டுகளுக்கும் மேல் ஆகிறது. இதனால், அதன் சில அடிப்படை வன்பொருள், மென்பொருள் செயலிகள் மேம்படுத்தப்படாமல் இருப்பதால் முந்தைய காலத்தி லும் சில தொழில்நுட்ப பிரச்னைகளை விண்வெளி நிலையம் சந்தித்துள்ளது. இது தொடர்பாக விஞ் ஞானில் அவ்வப்போது எச்சரித்து வருவதுண்டு.

சில நேரங்களில் காற்று கசிவு, எஞ்சின்கள் திடீரென இயக்குவது, விரிசல் போன்ற பிரச்னைகளும் எதிர் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், அவை மிகப்பெரிய பிரச்னையாக வெடிக்காத வகையில் விண்வெளி நிலைய வீரர்களும், தரை கட்டுப்பாட்டு விஞ்ஞானி களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு பிரச்னைகளை சமாளித்து வருகின்றனர்.

ரஷ்யாவின் விண்வெளி நிறுவனமான எனர்ஜியா வின் தலைமை பொறியாளர் விளாடிமீர் சோலோ யொஃப் கடந்த 1ஆம் திகதி ஊடகங்களிடம் பேசும் போது சர்வதேச விண்வெளி நிலையத்தின் பல வன்பொருள் மற்றும் பாகங்கள் பழுது நீக்க முடியாத வகையில் இருப்பதாக கூறியிருந்தார்.

இவர் பணியாற்றும் எனர்ஜியா நிறுவனம்தான் சர்வதேச விண்வெளி நிலையத்தில் ரஷ்ய மாட்யூலின் பெரும்பகுதியை மேம்படுத்தும் முக்கிய பணியை செய்து வருகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு ரஷ்யாவின் சார்யா என பெயரிடப்பட்ட சரக்குகள் கையாளும் பிரிவில் ஏற் பட்ட சிறு, சிறு விரிசல்கள் காலப்போக்கில் மேலும் மோசம் அடையலாம் என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

**ஐ.எஸ்.எஸ். எப்படி செயல்படுகிறது?**

அமெரிக்கா, கனடா, ஜப்பான் மற்றும் சில ஐரோப் பிய நாடுகள் சேர்ந்து கூட்டு திட்டமாக சர்வதேச விண்வெளி நிலையத்தை கட்டமைக்கும் பணியை 1998இல் நிறைவு செய்தனர். தொடக்கத்தில் இந்த நிலையம், 15 ஆண்டுகளுக்கு இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. ஆனால், அதன் பிறகும் அந்த நிலையம் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டு தொடர்ந்து இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், உலோகத்தால் உருவான இந்த நிலையம், சேதம் அடைந்தால் அது ஈடு செய்ய முடி யாத பேரழிவை ஏற்படுத்தலாம் என்று ரஷ்ய துணை பிரதமர் யூரி போரிசோஃப் கடந்த மாதம் அந்நாட்டு அரசு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின்போசு கூறியிருந்தார். அத்தகைய ஒரு நிலை வராமல் நாம் தடுக்க வேண்டும் என்றும் அவர் ஐ.எஸ்.எஸ். உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.


முன்னதாக, கடந்த ஆண்டு ரஷ்ய விண்வெளி நிலையமான ரோஸ்கோமாஸ், சர்வதேச விண்வெளி நிலையத்தின் வெளிப்புற வடிவின் நிலையை பார்க் கும்போது அது 2030இற்கு மேல் தாக்குப்பிடிக்காது என்று கூறியிருந்தது.

கடந்த ஜூலை மாதம் ரஷ்யாவின் நௌகா மாட் யூல் பகுதியில் ஜெட் இயங்குதளத்தில் ஏற்பட்ட பிரச்னை காரணமாக ஐ.எஸ்.எஸ்.செயல்பாடுகள் சில நிமிடங்கள் முடங்கின.

இதற்கிடையே, சர்வதேச விண்வெளி நிலையத் தில் இருந்து வெளியேறி தமது சொந்த விண்வெளி நிலையத்தை கட்டமைக்க ரஷ்யா ஆர்வம் காட்டி வருகிறது. ஆனால், ஆக்கபூர்வ முடிவு எதையும் அந்த நாட்டு அரசு வெளிப்படையாக இன்னும் அறிவிக்கவில்லை.

தற்போதைக்கு சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஏழு வீரர்கள் உள்ளனர். அதில் இரண்டு பேர் ரஷ்யா வின் காஸ்மோனாட்டுகள். மூன்று பேர் அமெரிக்கர் கள், பிரான்ஸ் மற்றும் ஜப்பானைச் சேர்ந்த தலா ஒரு வர் உள்ளனர்.

**பி.பி.சி.**



# 2021 க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டி



D - **31.03.2021** இல் ரூபா.40000 தருமதியான வியாபார வருமதியாளர் ஒருவர் **02.07.2021 இல் முறிவடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டார்.**

**LKAS 10(அறிக்கையிடல் காலத்துக்குப் பின்னரான நிகழ்வுகள்)** இன் படி, கம்பனியின் **31.03.2021** இலுள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் மேலேயுள்ள எந்த **நிகழ்வு/நிகழ்வுகள் சீராக்கம் செய்யத் தேவையற்றவையும்,** மேலும் சீராக்கப்படும் நிகழ்வுகளினால் **31.03.2021** முடிவடைந்த காலப்பகுதிக்கான **இலாபத்தில்** ஏற்படும் **தாக்கமும் முறையே காட்டுவது.**

1. A, C ஆகியன மாத்திரம், ரூபா.404000 குறையும்
2. A, D ஆகியன மாத்திரம், ரூபா.404000 குறையும்
3. B, C ஆகியன மாத்திரம், ரூபா.90000 குறையும்
4. B, D ஆகியன மாத்திரம், ரூபா.440000 குறையும்.
5. C, D ஆகியன மாத்திரம், ரூபா.44000 குறையும்

(............)

**22)** LKAS 37 **(ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள், நிகழத்தக்கச் சொத்துக்கள்)இன் படி ஏற்பாடுகள், ஏனைய பொறுப்புக்களுடன்** வேறுபடுவது ஏற்பாட்டினை கொடுத்துத் தீர்க்கும் போது செலுத்த வேண்டிய பெறுமதியும், கொடுத்துத் தீர்ப்பதற்கான காலமும் பின்வருவனவற்றுள் சரியானது.

1. நிச்சயமானது
2. நிச்சயமற்ற தன்மையாயிருத்தல்
3. பெறுமதியை மதிப்பிடலாம் காலத்தினை மதிப்பிடமுடியாது
4. உறுதியாக எதுவும் கூற முடியாது
5. நிகழ்காலக் கடப்பாட்டினைக் கொண்டிருக்காமை

(............)

- **23,24 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

**பின்வரும் தகவல்கள் அஞ்சலி PLC** நிறுவனத்தின் **31.03.2021** இல் முடிவடைந்த **காலப்பகுதியுடன் தொடர்பானவை.**

| | **(ரூபா 000)** |
|---|---|
| காலப்பகுதிக்குரிய இலாபம் | 1400 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 900 |
| செலுத்திய பங்கு இலாபம் | 100 |
| நிறுத்தி வைத்த வருமானம் **(01.04.2020 இல்)** | 1800 |
| இயந்திர மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்**(01.04.2020 இல்)** | 300 |
| கம்பனியின் கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் **(01.04.2020)இல்** | 2000 |

**2021.03.31** இல் முடிவடைந்த **காலப்பகுதியில் இயந்திர மீள்மதிப்பீடு** செய்த படியினால் ரூபா.200000 **மீள்மதிப்பீட்டு குறைவு ஏற்பட்டதுடன்,** மோட்டார் வாகனத்தினை **முதல் முறையாக** மீள்மதிப்பீடு செய்த போது ரூபா.100000 **மீள் மதிப்பீட்டு மிகை ஏற்பட்டது.** அத்துடன் இத்தினத்தில் **நிறுத்தி வைத்த வருமானத்தினை மூலதனமாக்கியது** ரூபா.500000 ஆகும்.

**23)** 2021.03.31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான **ஏனைய முற்றுமடங்கிய வருமானம்** மற்றும் **மொத்த முற்றுமடங்கிய வருமானம் என்பன முறையே.**

| | **ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ரூபா.000)** | **மொத்த முற்றுமடங்கிய வருமானம் (ரூபா.000)** |
|---|---|---|
| 1. | (100) | 1300 |
| 2. | 200 | 800 |
| 3. | 100 | 1600 |
| 4. | (300) | 1400 |
| 5. | 200 | 1600 |

(............)

**24)** 2021.03.31 இல் உள்ளவாறான கம்பனியின் **மீள்மதிப்பீட்டு ஒதுக்கம், நிறுத்தி வைத்த வருமானம்,** மற்றும் **கம்பனியின் உரிமையாண்மை என்பன முறையே**

| | **மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் (ரூபா 000)** | **நிறுத்திவைத்த வருமானம் (ரூபா 000)** | **உரிமையாண்மை (ரூபா 000)** |
|---|---|---|---|
| 1. | 200 | 1200 | 3900 |
| 2. | 100 | 1200 | 2500 |
| 3. | 200 | 1000 | 3900 |
| 4. | 300 | 1200 | 2500 |
| 5. | 100 | 1000 | 4500 |

(............)

**25)** கீழே தரப்பட்டவைகள் உற்பத்திப் பொருட்களுக்கு **மேந்தலைகளைச் சாட்டுதல் செய்தல்** தொடர்பான **படிமுறைகள்** ஆகும். மேற்படி படிமுறைகளின் **சரியான வரிசைக்கிரமமாக அமைவது.**

A - நேரடியாக அடையாளப்படுத்தக்கூடிய பொது மேந்தலைகளினை கிரய நிலையங்களிற்கு **ஒதுக்குதல்**

B- தீர்மானிக்கப்பட்ட உறிஞ்சல் வீதங்களின் அடிப்படையில் உற்பத்திக்கிரயநிலைய மேந்தலைகளை உற்பத்திப் பொருட்களினால் **உறிஞ்சப்படுதல்**

C- பொருத்தமான அடிப்படைகளைப் பாவித்துப் பல்வேறு கிரய நிலையங்களிற்கான பொதுவாகக் காணப்படும் மேந்தலைகளினைப் பகிர்வு செய்தல்.

D- சேவைக்கிரய நிலையத்தின் மேந்தலைகளினை உற்பத்தி கிரய நிலையத்திற்கு மீள்பகிர்வு செய்தல்

1. A,B,C,D 2. A,C,B,D 3. A,C,D,B 4. A,D,B,C 5. A,D,C,B

(............)

**26)** நிசாந்தி PLC இன் **2021 மார்ச் 31** இல் நிதிக்கூற்றுக்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களும், **சில பகுப்பாய்வு விகிதங்களும் பின்வருமாறு**

கடன்விற்பனை ரூபா.400000

மொத்த இலாபவீதம் **(விற்பனை விலையில்)** 25%

இருப்பு சுழற்சி வீதம் **(தடவைகள்)** 4

கடன் சேகரிக்கும் காலம் **(நாட்கள்)** 90

- **வருடத்தில் 360 வேலை நாட்கள் எனக் கொள்க.**
- **எல்லா விற்பனைகளும் கடன் விற்பனையெனக் கொள்க.**

# யாழில் மூடப்பட்ட சுவிஸ் தூதரகத்தை மீண்டும் திறவுங்கள்!

## வடக்கு - கிழக்கு ஆயர் மன்றம் கோரிக்கை



யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்து பின்னர் தற்காலிகமாக மூடப்பட்ட சுவிஸ் தூதரக அலுவலகத்தை மீண்டும் திறக்க ஆவன செய்யுங்கள் என்று இலங்கைக்கான சுவிஸ் தூதரிடம் வடக்கு - கிழக்கு ஆயர் மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் மன்னார் மறைமாவட்டங்களின் ஆயர்கள் கையொப்பமிட்டு இலங்கைக்கான சுவிஸ் தூதருக்கு அனுப்பிய கடிதத்தில் மேற்படி வேண்டுகொள் விடுக்கப்பட்டுள்ளது.

போர் முடிவுக்கு வந்து 12 வருடங்கள் நிறைவுற்றபோதும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ள வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் சர்வதேச நிறுவனங்கள், மனித உரிமை கண்காணிப்பாளர்கள், இராஜதந்திர அதிகாரிகளின் பிரசன்னம் மிகவும் அவசியமாக இருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் சுவிஸ் தூதரகத்தினுடைய அலுவலகத்தின் பிரசன்னம் மிகவும் முக்கியமானது என்பதை ஆயர் மன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளையில், கடந்த காலங்களில் சுவிஸ் அலுவலகத்தின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளினால் இலங்கை நாடும் குறிப்பாக வடக்கு - கிழக்கு மக்களும் அடைந்த நன்மைகளுக்காக இந்தக் கடிதத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையைத் தமது பூர்வீகமாகக் கொண்டு தற்போது சுவிஸ் பிரஜைகளாக இருக்கின்றவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் பலர் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் வாழுகின்ற நிலையில் அவர்களின் சமூக, கலாசார, பொருளாதார தேவைகளைக் கண்காணிக்க யாழ்ப்பாணத்தில் மீளத் திறக்கப்படும் சுவிஸ் தூதரக அலுவலகம் மிகவும் உறுதுணையாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ள வடக்கு - கிழக்கு ஆயர் மன்றம், இவற்றைக் கருத்தில்கொண்டு இந்த அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் விரைவில் மீளத் திறக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ - 03)



# 'எக்ஸ் - பிரஸ் பேர்ல்' கப்பலை அகற்றும் பணிகள் நவம்பரில்

## நீதி அமைச்சர் அலி சப்ரி தகவல்

கொழும்பு, செப். 13

"கொழும்பு கடற்பரப்பில் தீ பற்றி எரிந்த 'எக்ஸ் - பிரஸ் பேர்ல்' கப்பலை அகற்றும் பணி எதிர்வரும் நவம்பர் முதல் வாரத்தில் தொடங்கும்."

- இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பருவக்காற்று காரணமாக கப்பலை அகற்றுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது எனவும், கப்பலை அகற்றுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் கப்பல் வைத்திருக்கும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்காக சர்வதேச நிறுவனங்களிடமிருந்து விலைமனு கோரப்பட்டுள்ளது.

கப்பல் அகற்றப்படுவதால் நாட்டின் கடல்சார் சுற்றுச் சூழல் அமைப்புக்கு ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்துமா என்பது குறித்தும் ஆராய விசேட நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது" - என்றார்.

கப்பலை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் குறித்து கப்பல் வைத்திருக்கும் நிறுவனத்திடம் விசாரிக்க நிபுணர் குழுவுக்கு நீதி அமைச்சர் ஏற்கனவே அறிவுறுத்தியிருந்தார்.

கொழும்பு கடற்பரப்பில் தீ பற்றி எரிந்த 'எக்ஸ் - பிரஸ் பேர்ல்' கப்பல் காரணமாக இலங்கை மிகப்பெரிய அழிவை சந்தித்தது.

இதன் காரணமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடல் ஆமைகளும் சுமார் 45 டொல்பின்களும் உயிரிழந்துள்ளன என்று கூறப்படுகின்றது.

'எக்ஸ் - பிரஸ் பேர்ல்' கப்பல் நிறுவனம் ஆரம்பகட்ட நட்ட ஈடாக 72 கோடி ரூபாயை இலங் கைக்கு வழங்கியுள்ளது. (இ)

# உணவுக்கு தட்டுப்பாடு நாட்டில் ஏற்படவில்லை!

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, செப். 13**

**"கொரோனாத் தொற்றுப் பரவலால் நாடு முடக்கப்பட்டுள்ள நிலையிலும் இங்கு உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை."**

**- இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.**

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உலகின் ஏனைய நாடுகளைப் போன்றே இலங்கையும் சவால்களை எதிர்கொண்டுள்ளது. விவேகமான கொள்கைகள் மூலம் அவற்றை எதிர்கொள்ள முடியும்.

இந்த வருடம் இலங்கையின் பொருளாதாரம் 4.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்யும்"- என்றார்.

இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு இல்லை என்றால் ஏன் உணவு விநியோக அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என குறித்த சர்வதேச ஊடகத்தின் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போது,

"நாட்டில் சில மோசமான வர்த்தகர்கள் செயற்கையாக உணவுத் தட்டுப்பாட்டை உருவாக்கி, இலாபம் ஈட்டப் பார்க்கின்றனர். அதனைத் தடுப்பதற்காகவே அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது" என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் பதிலளித்தார். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 669 பேர் கைது

கொழும்பு, செப். 13

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 669 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும், 38 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 69 ஆயிரத்து 957 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, அநாவசியமான முறையில் மேல் மாகாண எல்லையை நேற்றுமுன்தினம் கடக்க முற்பட்ட 242 வாகனங்களில் பயணித்த 318 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் தலை மையகம் தெரிவித்துள்ளது. மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளி யேறும் 13 இடங்களில் பொலி ஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து சோதனைகளை முன்னெடுக்கின்றனர்.

இதன்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி நேற்றுமுன்தினம் 761 வாகனங்களில் பயணித்த 1,085 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (இ)

# வவுனியாவில் டெல்டா தாண்டவம் 2 நாட்களில் 50 பேருக்குத் தொற்று

வவுனியா, செப். 13

வவுனியா மாவட்டத்தில் கடந்த இரு நாட்களில் 50 பேர் கொரோனாவின் டெல்டா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின. அதில் செட்டிகுளம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, வவுனியா தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு என்பவற்றில் 15 பேர் டெல்டா வைரஸ் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே, வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த வெள்ளிக்கிழமை 35 பேர் டெல்டா வைரஸ் தொற்றுடன் இனங்காணப்பட்ட நிலையில், மேலும் 15 பேர் நேற்றுமுன்தினம் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் வவுனியா மாவட்டத்தில் இதுவரை 50 பேர் டெல்டா வைரஸ் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவ டிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, டெல்டா வைரஸ் தொற்றுப் பரவல் அடைவதால் மக்கள் விழிப்புணர்வுடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர். (இ)

# வவுனியாவில் ஒரே நாளில் ஏழு பேர் தொற்றால் மரணம்

வவுனியா, செப். 13

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் மேலும் 7 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என 7 பேர் நேற்றுமுன்தினம் மரணமடைந்தனர்.

வவுனியா வடக்கு, தரணிக்குளம், பெரியஉலுக்குளம், பூந்தோட்டம், புளியங்குளம், பட்டானிச்சூர் (இரண்டு நபர்கள்) ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கொரோனாத் தொற்றால் மரணித்தவர்களாவார்கள். இந்நிலையில் மரணித்த 7 பேரினதும் உடல்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

# இஸ்ரேல் சிறையிலிருந்து தப்பிய நால்வர் சிக்கினர்!



ஜெருசலேம், செப். 13

இஸ்ரேலின் அதிபாதுகாப்பு நிறைந்த சிறைகளில் ஒன்றான கில்போவா சிறையிலிருந்து தப்பிய 6 பலஸ்தீன கைதிகளில் நால்வர் பிடிபட்டனர் என்று இஸ்ரேல் பொலிஸார் தெரிவித்தனர்.

பிடிபட்டவர்களில் இருவர் சனிக்கிழமை அதிகாலை கார் நிறுத்தம் ஒன்றில் பதுங்கி இருந்த போது பிடிக்கப்பட்டனர் என்றும் மற்ற இருவர் வெள்ளிக்கிழமை அன்று நசரேத் நகரின் அருகே பிடிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்குக்கரையில் உள்ள நகரான ஜெனின் எனும் நகரில் அல்-அக்சா தியாகிகள் படையின் முன்னாள் தளபதி சக்காரியா ஜூபெய்தியும் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் ஒருவராவார். மீதமுள்ள மூவர் 'இஸ்லாமிய ஜிகாத்' எனும் அமைப்பினர் ஆவர்.

கடந்த திங்களன்று கில்போ சிறைச்சாலையில் இருந்து ஆறு பேர் தப்பிய பின் அவர்களை தேடும் வேட்டை ஆரம்பமானது. இந்த நிலையிலேயே 4 பேர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)



# படைகள் - புரட்சியாளர்கள் மியன்மாரில் கடும்மோதல்!

## 20 பேர் உயிரிழப்பு

யங்கூன், செப். 13

மியன்மாரில் இராணுவத்திற்கும் புரட்சியாளர்களுக்கும் இடையே இடம்பெற்ற கடும் மோதலில் 20 பேர் பலியாகினர் என்று தெரிய வருகின்றது.

மியன்மாரில் கடந்த பெப்ரவரி மாதம் ஜனநாயக அரசாங்கத்தை அகற்றிவிட்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து அங்கு மக்கள் புரட்சி வெடித்தது. போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்ட நிலையில், அங்கு இராணுவத்திற்கு எதிராக புரட்சிக்குழுக்கள் உருவாகியுள்ளன.

இவ்வாறு உருவான புரட்சி படை ஒன்றுக்கும் இராணுவத்தினருக்கும் இடையேயே நேற்று முன்தினம் துப்பாக்கி சண்டை இடம்பெற்றது. இந்த மோதலிலேயே 20 பேர் கொல்லப்பட்டனர். எனினும், கொல்லப்பட்டவர்கள் தொடர்பான விவரம் வெளியாகவில்லை. (ஐ)





# 9/11 தாக்குதல் 20 ஆண்டுகள்; உணர்வுபூர்வ நினைவேந்தல்

வாஷிங்டன், செப். 13

செப்ரெம்பர் 11 தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு உணர்வுபூர்வமாக அமெரிக்க மக்கள் அஞ்சலி செலுத்தினர். இதன்போது, தங்கள் உறவினர்களின் உருவப் படங்களை கையில் ஏந்தியவாறு கண்ணீர் சிந்தினர் உறவுகளை இழந்த உறவுகள். அத்துடன், உயிரிழந்தவர்களின் கல்லறைகளுக்கு மலர்கள் தூவியும் முத்தமிட்டும் அவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

2001 செப். 11 நான்கு விமானங்கள் கடத்தப்பட்டன. இரு விமானங்கள் நியூயோர்க்கின் புகழ்பெற்ற இரட்டை கோபுரங்களை மோதி அழித்தன. மற்றோர் விமானம் அமெரிக்காவின் பாதுகாப்பு தலைமையகமான பென்ரகனை தாக்கியது. வெள்ளை மாளிகையை தாக்கும் நோக்கில் பறந்த மற்றோர் விமானம் வயல்வெளிகளில் வீழந்து நொறுங்கியது. இந்தத் தாக்குதல்களில் மூவாயிரம் வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இவர்கள் நினைவாக சனிக்கிழமை காலை 8.46 மணிக்கு (அமெரிக்க நேரம்) அமைதியாக அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகின. இது முதல் விமானம் இரட்டை கோபுரத்தில் மோதிய நேரமாகும்.

கிரவுண்ட் சீரோ நினைவிடத்தில் பதிக்கப்பட்ட 2977 உயிரிழந்தவர்கள் பெயர் கல்வெட்டுகளுக்கு அருகே ரோஜா பூக்கள் வைக்கப்பட்டன. இரவு வரை தொடர்ந்த அஞ்சலியில் வானில் இரு ஒளிக் கற்றைகள் பிரகாசிக்க செய்யப்பட்டன. "நாங்கள் மீண்டும் சந்திக்கும்வரை, என் அன்புக்குரியவரே..." என்று தொடங்கி உயிரிழந்த ஆயிரக்கணக்கானவரின் பெயர்கள் படிக்கப்பட்டன.

நியூயோர்க் நினைவிடத்தில் ஜனாதிபதி ஜோ பைடன், முதல் பெண்மணி ஜில் பைடன், மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளான பில் கிளின்ரன் - ஹிலாரி கிளின்ரன், பராக் ஒபாமா - மிற்செல் ஒபாமா ஆகியோர் பங்கேற்றனர்.

பென்சில்வேனியா, வேர்ஜினியாவிலும் நினைவேந்தல்கள் முன்னெடுக்கப்பட்டன. அமெரிக்காவின் உபஜனாதிபதி கமலா ஹரீஸ், தாக்குதல் இடம்பெற்றபோது ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஆகியோர் பென்சில்வேனியாவில் நடந்த நினைவேந்தலில் பங்கேற்றனர். (ஐ)

# ஈராக் விமான நிலையத்தில் 'ட்ரோன்' மூலம் தாக்குதல்!

பாஹ்தாத், செப். 13

ஈராக்கின் குர்திஷ் மாகாண தலைநகரான எர்பிளில் உள்ள விமான நிலையத்தில் ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தன்னாட்சி பெற்ற இந்த மாகாணத்தில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் உள்ளன. விமான நிலையமும் அவர்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இந்த நிலையிலேயே அங்கு ட்ரோன் மூலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ட்ரோன் மூலம் குண்டுகள் வீசப்பட்ட போதிலும் எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை என்று முதல்கட்ட தகவல்கள் வெளியாகின.

ஆனாலும், இந்தத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்தி வருவதாக குர்திஷ் மாகாண பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர். ஐ.எஸ். பயங்கரவாதிகள் அல்லது ஈரான் இந்த தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. (ஐ)



# அல்ஹைடா தலைவர் உயிருடன்? புதிய காணொலி வெளியானது!

நியூயோர்க், செப். 13

உயிரிழந்து விட்டாரென கூறப்பட்ட அல்ஹைடா அமைப்பின் தலைவர் அய்மான் அல்-ஜவாஹிரி, 9/11 தாக்குதலின் 20 ஆவது ஆண்டு நிறைவு தொடர்பில் சனிக்கிழமை வெளியான ஒரு புதிய காணொலியில் தோன்றியுள்ளார்.

அல்ஹைடாவின் பிரபல தலைவர் ஒசாமா பின்லேடனின் வாரிசான அய்மான் அல்-ஜவாஹிரி 2020 இல் இராணுத்தினர் நடத்திய ஒரு தாக்குதலில் உயிரிழந்தார் என ஊகங்கள் பரவின. இந்த நிலையில் அல்ஹைடா பயங்கரவாதக் குழுவின் தலைவர் அய்மான் அல்-ஜவாஹிரி, 9/11 தாக்குதலின் 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சனிக்கிழமை வெளியான ஒரு காணொலியில் தோன்றினார் என இஸ்லாமிய தீவிரவாத குழுக்களின் இணையத்தள செயல்பாட்டைக் கண்காணிக்கும் ஞஐவுநு புலனாய்வு குழு கூறியுள்ளது.

எனினும், 60 நிமிட அந்தக் காணொலி சமீத்தியவைதானா என்பது தொடர்பில் சந்தேகங்கள் எழுந்துள்ளன. காரணம் அவர் "தலிபான்களின் ஆப்கானிஸ்தான் வெற்றி பற்றி அந்த காணொலியில் குறிப்பிடவில்லை. ஆயினும்கூட, இந்த ஆண்டு ஜனவரி மாதம் சிரியாவில் அல்ஹைடாவுடன் தொடர்புடைய ஹூராஸ் அல்-டீன் குழு நடத்திய "ஜெருசலேம் யூதமயமாக்கல்" மற்றும் ரஷ்ய இராணுவத் தளத்தின் மீதான தாக்குதல் பற்றி அல்-ஜவாஹிரி பேசியுள்ளார். (ஐ)

# அமெரிக்காவில் தொற்றால் ஆறரை இலட்சம் பேர் மரணம்!

வாஷிங்டன், செப். 13

அமெரிக்காவில் கொரோனா தொற்றால் 6 இலட்சத்து 59 ஆயிரம் பேர் பலியாகினர் என்று ஜோன்ஸ் ஹொப்கின் பல்கலைக்கழக தரவு கூறுகின்றது.

இந்த நிலையில், மருத்துவமனைகளில் தொற்றால் உயிரிழந்த 16 ஆயிரம் பேரின் இறப்புகள் பதிவு செய்யப்படவில்லை என்று புதிய ஆய்வு தகவல் கூறியுள்ளது. ஹவார்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் கரன் ஷென் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இவரின் ஆய்வில், 20 மாகாணங்களை ஆராய்ந்ததில் அங்கெல்லாம் 44 சதவீத கொரோனா பாதிப்புகளும், மருத்துவமனைகளில் நேர்ந்த 40 சதவீத இறப்புகளும் மாகாண சுகாதார துறைகளில் பதிவு செய்யப்பட்டும், தேசிய தரவுகளில் சேர்க்கப்படவில்லை என தெரியவந்துள்ளது. (ஐ)

# கொலம்பிய இராணுவம்மீதான தாக்குதலில் 5 வீரர்கள் பலி!

அராகிட்டா, செப். 13

கொலம்பிய இராணுவம்மீது நடத்தப்பட்ட கெரில்லா தாக்குதலில் ஐவர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அராகிட்டா நகரிலுள்ள அராவ்கா துறைப் பகுதியில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

"இந்தத் தாக்குதலில் உயிரிழந்த எங்களுடைய நாயகர்களின் குடும்பத்தினர்கள், நண்பர்கள் மற்றும் சக பணியாளர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்து கொள்கிறோம்", என கொலம்பியா இராணுவம் இரங்கல் தெரிவித்துள்ளது.

இராணுவத்திற்கு நெருக்கடி அளிக்கும் வகையிலான கோழைத்தன செயல் என்று கொலம்பிய அதிபர் இவான் டக் ருவிட்டர் வழியே இரங்கல் தெரிவித் துள்ளார். (ஐ)



# இருபது -20 உலக கிண்ணம்; இலங்கை அணி அறிவிப்பு!

கொழும்பு, செப். 13

ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஒக்ரோபரில் நடைபெறவுள்ள இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில், பிரதான சுழல் பந்துவீச்சாளரான அகில தனஞ்சய 15 பேர் அணியில் சேர்க்கப்படாமல் மேலதிக வீரர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஒக்ரோபர் 17இல் ஆரம்பமாகும் இருபது - 20 உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி தகுதிச் சுற்று மூலமே தகுதி பெற முடியும். தகுதிச் சுற்றில் குழு ஏ இல் இடம்பெற்றுள்ள இலங்கை அணி நமீபியா, நெதர்லாந்து, அயர்லாந்து அணிகளுடன் மோத வேண்டும்.

உலகக் கிண்ணத் தொடருக்கு அணித் தலைவராக தசூன் சானக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், தென்னாபிரிக்க அணிக்கு எதிராக ஒருநாள் போட்டியில் சிறப்பாக செயல்பட்ட மகேஷ் தீக்ஷனவும் அணிக்கு உள்வாங்கப்பட்டுள்ளார்.

அணி விவரம்:

தசூன் சானக (அணித் தலைவர்) தனஞ்சய டீ சில்வா (உப தலைவர்), அவிஷ்க பெர்னான்டோ, சாரித் அசலங்கா, பானுக ராஜபக்ஷ கமிந்து மெண்டிஸ், குசல் பெரேரா, தினேஷ் சந்திமால், வனிந்து ஹசரங்கா, சாமிக கருணாரத்ன, லஹிரு மதுசங்க, துஷ்மந்த சாமீர, நுவான் பிரதீப், மகேஷ் தீக்ஷன, பிரவீன் ஜெயவிக்ரம.

இதேவேளை, லஹிரு குமார, புலின தரங்க, பினுர பெர்னான்டோ, அகில தனஞ்சய ஆகியோர் மேலதிக வீரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)



# மீள அறிமுகமான போட்டியில் ரொனால்டோ இரு கோல்கள்!

மன்செஸ்டர், செப். 13

மன்செஸ்டர் யுனைட்டட் அணிக்காக மீண்டும் அறிமுகமான போட்டியில், ரொனால்டோ 2 கோல்கள் அடித்து அசத்தினார். இதன் மூலம் நியூகாஸ்டல் அணியை மன்செஸ்டர் யுனைட்ட் 4 - 1 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றி கொண்டது.

இங்கிலீஷ் பிறீமியர் லீக் தொடர் தற்போது நடக்கிறது. அண்மையில் நடந்த வீரர்கள் பரிமாற்றத்தில் இத்தாலியின் ஜூவன்ஸ் அணிக்காக ஆடிய ரொனால்டோவை மன்செஸ்டர் யுனைட்டட் மீண்டும் ஒப்பந்தம் செய்தது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் ரொனால்டோ அறிமுகமகானார். இந்தப் போட்டியில் நியூகாஸ்டல் அணிக்கு எதிராக 45 ஆவது நிமிடத்தில் கோல் அடித்த ரொனால்டோ 62ஆவது நிமிடத்தில் மீண்டும் கோல் அடித்து அசத்தினார்.

அவர் தவிர, பெர்னாண்டஸ், லிங்கார்ட் ஆகியோரும் மன்செஸ்டர் அணிக்காக கோல்களை அடித்தனர். நியூகாஸ்டல் யுனைட்டட் அணிக்காக மொங்கோ லியோ 56ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றை அடித்தார். (ஐ)

## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ்:

# வெற்றி கிண்ணம் எம்மா வசமானது!

### பிரிட்டனின் 44 வருட காத்திருப்புக்கு முடிவு



நியூயோர்க், செப். 13

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் சம்பியன் பட்டத்தை பிரிட்டனின் எம்மா ரடுகானு. இதன் மூலம் கிராண்டஸ்லம் போட்டி ஒன்றில் மகளிர் சம்பியனுக்கான பிரிட்டனின் 44 வருடக் காத்திருப்பு நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

அமெரிக்க நேரப்படி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.30 மணிக்கு இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தரவரி சையில் 150ஆவது இடத்திலிருந்த எம்மா, 73ஆவது இடத்திலிருந்த லேலா ஆகியோர் மோதினர்.

இதில், 18 வயதே ஆன எம்மா, நியூயோர்க்கில் நம்பமுடியாதளவு சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்தினார். 6-4, 6-3 என்ற செற் கணக்கில் தன்னை எதிர்த்து ஆடிய 19 வயதான கனடாவின் லேலா பெர்னாண்டஸை அவர் வீழ்த்தினார்.

போட்டியின் இடையே, முதல் செற்றில் 5 -3 என எம்மா முன்னிலையில் இருந்தபோது அவர் காயமடைந்தார். இதனால், அவர் மருத்துவ நேரத்தை எடுத்துக் கொண்டார். இது தொடர்பில் லேலா பெர்னாண்டஸ் தனது அதிருப் தியை போட்டி நடுவர்களிடம் தெரிவித்தி ருந் தார். எனி னும், போட்டியில் தொடர்ந்து ஆடிய எம்மா சிறப் பான ஆட் டத்தை வெளிப்ப டுத்தி இரு செற்களையும் தன் வசமாக் கினார்.

அமெரிக்க ஓப்பனில் 10 போட்டிகளை சந்தித்த எம்மா, எந்தப் போட்டியிலும் தோல்வியடையாமல் சம்பியன் வென்றுள்ளார். அத்துடன், 1999ஆம் ஆண்டின் பின்னர் தகுதிச் சுற்றின் மூலம் தெரிவாகி சம்பியன் வென்ற போட்டியாக இதுவே அமைந்தது. இதேபோன்று அப்போது செரீனா வில்லியம்ஸ் சம்பியன் வென்றிருந்தார். பட்டம் வென்ற எம்மாவுக்கு, பிரிட்டிஷ் மகாராணி, பிரதமர் பொரிஸ் ஜோன்சன் ஆகியோர் பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர். (ஐ)

# தென்னாபிரிக்க அணி 28 ஓட்டங்களால் வெற்றி

இலங்கைக்கு எதிரான முதல் இருபது - 20 போட்டியில் தென்னாபிரிக்க அணி 28 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இலங்கைக்கு வந்துள்ள தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடுகின்றது. முதல் போட்டி நேற்று முன்தினம் கொழும்பு ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை இழந்து 163 ஓட்டங்களை பெற்றது.

தென்னாபிரிக்க அணி சார்பில் எய்டன் மார்க்ரம் ஒரு பெள்ண்ட்ரி, 2 சிக்ஸர்கள் அடங்கலாக 48 ஓட்டங்களை அதிகபடியாக பெற்றுக்கொடுத்தார்.

இலங்கையின் பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க 23 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

164 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 135 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 28 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது.

இலங்கை அணி சார்பில் தினேஷ் சந்திமால் 5 பௌண்ட்ரிகள் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 66 ஓட்டங்களை அதிகப்படியாக பெற்றுக்கொடுத்தார்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் கேஷவ் மஹராஜ் 19 ஓட்டங்களை கொடுத்து ஒரு விக்கெட்டை கைப்பற்றினார். போட்டியின் நாயகனாக எய்டன் மார்க்ரம் தெரிவானார். (ஐ)

## ஐ.பி.எல். ரி-20 தொடர்:

# இங்கிலாந்தின் 3 வீரர்கள் விலகல்!

லண்டன், செப். 13

ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகவுள்ள ஐ.பி.எல். தொடரிலிருந்து இங்கிலாந்து வீரர்களான பெயர்ஸ்ரோ, டேவிட் மலன், கிறிஸ் வோக்ஸ் ஆகியோர் விலகுகின்றனர் என்று அறிவித்துள்ளனர்.

ஐ.பி.எல். தொடரில், பெயர்ஸ்ரோ ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணிக்காகவும், மலன் பஞ்சாப் கிங்ஸ் அணிக்காகவும், வோக்ஸ் டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்காகவும் விளையாடி வருகின்றனர்.

இந்த நிலையில், மூவரும் தனிப்பட்ட காரணங்களுக்காக விலககுகின்றனர் என்று அறிவித்துள்ளனர். எனினும், இவர்கள் மூவரும் டுபாயில் 6 நாட்கள் கட்டாய தனிமைப்படுத்தலை விரும்பவில்லை என்று கூறப்படுகின்றது.

இதனிடையே, இங்கிலாந்தில் இருந்து இந்திய வீரர்கள் ஐ.பி.எல். தொடருக்காக டுபாய்க்கு சென்றுள்ளனர். (ஐ)






# இலங்கை மாணவருக்கு அதிக கல்வி வாய்ப்புகள்

## இந்திய தூதுவர் உறுதி

கொழும்பு, செப். 13

இலங்கை மாணவர்களுக்கு அதிக கல்வி வாய்ப்புகளை வழங்க இந்தியத் தூதுவர் கோபால் போக்லே உறுதியளித்துள்ளார்.

கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை அவரின் அமைச்சில் சந்தித்தபோதே இந்தியத் தூதுவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்திய அரசின் உதவியுடன் உயர் தொழில்நுட்ப மற்றும் பாடசாலை கல்வி, அறிவியல் மற்றும் ஆராய்ச்சி துறையின் வளர்ச்சி மற்றும் சித்த மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் இலங்கை மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புகள் இவ்வாறு விரிவுபடுத்தப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் ஊடாக பல நூற்றாண்டுகள் பழமையான கல்வி மற்றும் கலாசார பாரம்பரியங்களைப் பற்றி இலங்கையர்களுக்கு அறிவைப் பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்க இந்தியத் தூதுவர் ஒத்துழைப்பை வழங்கியுள்ளார்

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேம்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் இந்தியத் தூதுவர் கோபால் போக்லே தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே தொழில்சார் மனிதவள பரிமாற்றங்கள் குறித்து ஆராயவும், கல்வி வாய்ப்புகள் மற்றும் கல்வி உதவித் தொகைகளைப் பாதுகாக்கவும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. (இ)

# மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 - 12 - 1939 | 11 - 09 - 2021 |



## அமிர்தநாதர் அகஸ்ரீன் (சம்மாட்டி)

(மண்டைதீவு-யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மண்டைதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல:120, 2ஆம் குறுக்கு வீதியினை வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தநாதர் அகஸ்ரீன் கடந்த (11.09.2021) சனிக்கிழமை அன்று இறைவனடி சோர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற லோப்புஅமிர்தநாதர் – றோசம்மா தம்பதியரின் மூத்த மகனும், அமலசீலி (றஞ்சிதம்) அவர்களின் அன்புக் கணவரும், செல்வசிங்கம் (பெரியராசா),செல்வநாயகம் (சின்னராசா), யூலிற்றா, நசரேத்தம்மா, இம்மனுவல் (பியதாஸ் – கனடா) ஆகியோரின் சகோ தரனும், அருள்றாஜ் (உதயன் – பிரான்ஸ்), அமலராஜ் (சுந்திரன் – இத் தாலி), அமுகராஜ் (சுகு), அலின்றாஜ் (சசி–கனடா),அலிக்ஸ்மா (கியூபா), அனுராஜ் (கிசோக்) ஆகியோரின் பாசமிகுதந்தையும், குயின் அனஸ்ரி (சித்திரா–பிரான்ஸ்), ஆன்லியூலின் (வீஜினி–பிரான்ஸ்), சர்மிலா (றூபிகா–கனடா),நிஷாந்தன் ஆகியோரின் மாமனாரும், செரோன், அபிஷா, அஸ்மி, அஸ்வினி, ஆகாஸ், லக்சித், கிஷா, றஷா ஆகியோரின் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**0777122686, 00393270898408, 0033610235858, 0012892186634**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# ஊரடங்கு அமுலிலுள்ள காலப்பகுதியில் மின் இணைப்பு துண்டிக்கப்படமாட்டாது!

## அமைச்சர் காமினி லொக்குகே அறிவிப்பு



கொழும்பு, செப்.13

**“நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள காலப் பகுதியில் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த தாமதமானாலும் மின்சார இணைப்பு துண்டிக்கப்படமாட்டாது.”**

- இவ்வாறு மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள இந்த காலப்பகுதியில் பொது மக்கள் வருமானத்தைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாக இலங்கை மின்சார சபை இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (இ)

# மக்களுக்கு குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்க வேண்டும்

## ஐ.தே.க. தலைவர் ரணில்

கொழும்பு, செப். 13

அரசால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் மக்களை ஒடுக்குவதற்கான ஒழுங்குவிதிகள் கொண்டுவரப்பட்டால் அதற்கு எதிராக நீதிமன்றம் செல்வோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர்



மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“அவசரகாலச் சட்டத்தின் கீழ் அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பிரச்னை இல்லை. ஆனால், அதன்மூலம் மக்களுக்குக் குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்க வேண்டும்.

தற்போது அரிசியைத் தவிர மற்றைய அனைத்துப் பொருட்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

அவ்வாறாகப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வியாபாரிகளிடம் தற்போது பணம் இல்லை” - என்றார். (இ)

# இலத்திரனியல் சாதனங்களின் விலைகள் திடீரென அதிகரிப்பு

## நுகர்வோர் கடும் விசனம்

கொழும்பு, செப்.13

இலங்கையில் மடிக்கணினிகள் மற்றும் கைத்தொலைபேசிகள் உள்ளிட்ட இலத்திரனியல் சாதனங்களின் விலைகள் திடீரென உயர்வடைந்துள்ளன.

இந்தப் பொருட்களின் விலைகள் 20 ஆயிரம் ரூபாய் முதல் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வரை அதிகரிக்கத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலத்திரனியல் சாதனங்களை இறக்குமதி செய்பவர்களும், மடிக்கணினிகள், கைத்தொலைபேசிகள் மற்றும் பிறமின் சாதனங்களை விற்கும் பல முக்கிய நிறுவனங்களும் இவ்வாறு விலை அதிகரிப்பைச் செய்துள்ளன என்று நுகர்வோர் குற் றஞ்சாட்டுகின்றனர்.

32 அங்குல தொலைக்காட்சி பெட்டியின் விலை 35 ஆயிரம் ரூபாய் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு மடிக்கணினிகள் மற்றும் கைத்தொலைபேசிகளுக்கு நாட்டில் கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது எனவும் கூறப்படுகின்றது.

அரசு விதித்துள்ள புதிய இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக, மின்சார சாதனங்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை தோற்றியுள்ளது என இறக்குமதியாளர்களும் விற்பனை முகவர்களும் குறிப்பிடுகின்றனர்.

இறக்குமதி வைப்புத்தொகை 100 சதவீதமாக உயர்த்தப்பட்டதன் காரணமாக ஒரே நேரத்தில் ஆயிரம் மடிக்கணினிகள் அல்லது கைத்தொலைபேசிகளை இறக்குமதி செய்யும் வாய்ப்பு 200 ஐ விடவும் குறைந்துள்ளது எனவும் இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்தியுள்ள சில வர்த்தகர்கள் பொருட்களைப் பதுக்கிவிடுகின்றனர் எனவும், மடிக்கணினிகள் மற்றும் கைத்தொலைபேசிகள் உள்ளிட்ட பிற பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்த அரசு உடனடியாகத் தலையிட வேண்டும் எனவும் நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ)

# விலங்குகளை வேட்டையாடிய ஐவர் கைது!

வலப்பனை, செப். 13

விக்ரோறியா, ரந்தெனிய மற்றும் ரந்தெம்பே ஆகிய சரணாலயங்களிலுள்ள விலங்குகளை வேட்டையாடி வந்த ஐவரை கீர்த்திபண்டாபுர வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வேட்டையாடுவதற்காகப் பயன்படுத்திய துப்பாக்கி, வெடி மருந்துகள், வெடிப்பொருட்கள் மற்றும் இறைச்சியைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்திய ஓட்டோ, மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி மிகவும் சூட்சுமுமான முறையில் சரணாலயத்துக்குள் நுழைந்து விலங்குகளை வேட்டையாடியுள்ளதுடன் அவற்றின் இறைச்சிகளை விற்பனை செய்யும் நடவடிக்கையில் குறித்த ஐவரும் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் வலப்பனை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளனர்.(இ)



## இலங்கை குறித்து...

46/1 தீர்மானத்தின் கடப்பாடுகளில் இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை என கருதுகின்ற விடயங்கள் தொடர்பில் அவர் தனது அறிக்கையில் அவர் குறிப்பிடவிருக்கின்றார். இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படுப்படும் பாரதூரமான மனித உரிமைகள் மீறல்கள், சர்வதேச சட்டங்கள் மீறல்கள் தொடர்பில் பல கடப்பாடுகள் அடங்கிய தீர்மானம் பெப்ரவரியில் மனித உரிமை பேரவை நிறைவேற்றியது.

இந்த தீர்மானங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டவை எவை நடைமுறைப் படுத்தப்படாதவை எவை என்பதை ஆணையாளர் பட்டியலிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. முக்கியமாக ஆதாரங்களையும், சாட்சியங்களையும் பேணிப்பாதுகாப்பதற்கான அலுவலகத்தை அமைப்பது குறித்த நிலைப்பாட்டை அவர் வெளியிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த 46 ஆவது கூட்டத் தொடரில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதற்கான நிதியும் கிடைத்திருக்கும் நிலையில், அவ்விடயத்தில் அடுத்த கட்ட செயல்பாடுகளை ஆணையாளர் அறிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் விரிவான அறிக்கை ஒன்று ஜெனிவாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள போதிலும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை கடுமையானதாக காணப்படும் என ஜெனிவாவில் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசாங்கம் அனைத்து நாடுகளிற்கும் 14 அம்சங்களை கொண்ட அறிக்கையொன்றை வழங்கியது. இந்த அறிக்கை மனித உரிமைகள் விவகாரங்களில் அரசாங்கத்தின் சாதனைகளை தெரிவிப்பதாக காணப்படுகின்றது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது ஒன்று கடுமையான விமர்சனங்களை தவிர்ப் பது. இரண்டாவது சர்வதேச சமூகம் கருதுவதற்கு மாறாக கடந்த தீர்மானம் குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படுவ தாக தெரிவிப்பது.

கனடா, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்ற உள்ளன. இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங்கள் குறித்து இந்த நாடுகள் கேள்விகளை எழுப்பலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே வலியுறுத்தப்பட்ட சர் வதேச பொறிமுறைக்கான அழுத்தங்களும் காணப்படும் என்றும் கணிக்கப்படுகின்றது.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் பேரசிரியர் ஜீ. எல். பீரிஸ் இணைய வழியாக கலந்துக்கொண்டு உரையாற்றவுள்ளார். இலங்கையில் இடம்பெற்றுள்ள முன்னேற்றங்களை பார்வையிடுவதற்காக மார்ச் மாதத்திற்கு முன்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவேண்டும் என அரசாங்கம் அழைப்பை விடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், மனித உரிமைகள் ஆணையாளர் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு என தெரிவித்துள்ள இராஜதந்திர வட்டாரங்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைதான் அடையாளம் கண்டுள்ள விடயங்களை அரசாங்கம் முதலில் நடைமுறைப்படுத்தவேண்டும் என எதிர்பார்க்கின்றது என குறிப்பிட்டுள்ளன.

தமிழ்க் கட்சிகளும் ஜெனிவா கூட்டத் தொடரை முன்னிட்டு தனித்தனியாகவும், கூட்டாகவும் நான்கு கடிதங்களை ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ளன.

## நோய் அறிகுறிகள்...

அன்ரிஜென் பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். தனிமைப் படுத்தல் ஊரடங்கு முன்னெடுக்கப்படும் விதம் குறித்து தான் அதிருப்தியடைந்துள்ளாரென அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் முடக்கல் நிலையை கடைப்பிடிப்பதை உறுதி செய்வதற்காக அதிகளவு படையினரையும் பொலிஸாரையும் பயன்படுத்தவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஒற்றுமை,...

இத்தாலியின் போலோக்னா நகரில் நடைபெறும் ஜி 20 சர்வமத மாநாட்டின் ஆரம்ப தினமான நேற்று முதலாவது அமர்வில் உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜி20 அரச தலைவர்களின் மாநாடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 30-31 ஆகிய இரு தினங்கள் இத்தாலி தலைநகர் ரோமில் நடைபெறவுள்ள நிலையில் அதனை முன்னிட்டு ஜி20 சர்வமத மாநாடு இடம்பெறுகிறது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜி20 சர்வமத மாநாட்டில் உரையாற்றினார். ஜி20 சர்வமத மாநாட்டில் பிரதமர் ஆற்றிய உரை வருமாறு,

“இன, மத மற்றும் கலாசார பன்முகத் தன்மை என்பன எமது பிராந்தியத்தின் முக்கிய அம்சமாகும். எமது நாடுகளில் பல்வேறு இன, மத மற்றும் கலாசார பின்னணிகளை கொண்ட மக்கள் வசிக்கின்றனர்.

எனினும், இவ்வேறுபாடுகளுக்கு மத்தியில் ஒன்றிணைந்து, பல்வேறு சமூகங்களை ஒன்றிணைத்து, முதிர்நிலை தேசம் என்ற உணர்வை கட்டியெழுப்பும் சவாலுக்கு நாம் பதிலளித்துள்ளோம். பொருளாதார, அரசியல் மற்றும் சமூக இலக்குகளை அடையும் போது பெரும்பாலும் எமது எதிர்காலம் ஒரு தேசம் என்ற ரீதியில் அதன் ஒற்றுமை மற்றும் சகவாழ்விலேயே தங்கியுள்ளது.

தீவிரவாத சித்தாந்தங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வன்முறைகள் என்பன நமது யுகத்தின் மிக முக்கியமான சவால்களாகும். சரியாக இருபது வருடங்களுக்கு முன்பு நடந்த 9/11 பயங்கரவாதத் தாக்குதல்களின் சோகமான சம்பவங்களை இங்கே நாம் நினைவுகூர வேண்டும். அதில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருடன் நாம் அத்துயரத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும்.


குற்றவாளிகள் மற்றும் அவர்களினால் கூறப்படும் நோக்கம் என்னவாக இருப்பினும் இச்சம்பவம் அனைத்து விதத்திலும் பயங்கரவாதத்தை எதிர்த்து போராட வேண்டியதன் அவசியத்தை நினைவூட்டுகிறது.

கோவிட் 19 நெருக்கடியானது பல்வேறு மதங்கள், இனங்கள் மற்றும் நாகரிகங்கள் என்ற வேறுபாடின்றி ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் மரண அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. தொற்றிலிருந்து தப்பித்து மீண்டும் நமது வாழ்வை ஆரம்பிக்க வேண்டுமாயின் சர்வதேச ஒத்துழைப்பை பலப்படுத்த வேண்டும்.

நவீன மருத்துவத்தின் மூலம் கிடைக்கும் தடுப்பூசி மற்றும் பிற பாதுகாப்புகள் உலகம் முழுவதும் காணப்பட வேண்டியதுடன், சர்வதேச அமைப்பு மற்றும் வலுவான பொருளாதாரத்தை கொண்ட நாடுகளிடமிருந்து நிதி உதவிகளை பெற்றுக் கொள்வதற்கு பொருளாதார ரீதியில் வலுவற்ற நாடுகளுக்கான சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இது சிலர் மாத்திரமன்றி அனைவரும் வெற்றி பெறுவதற்கான போராட்டமாகும்.

தொற்று காரணமாக நாடுகள் தமது எல்லையை தற்காலிகமாக மூடுவது உகந்தது என்ற போதிலும், தனிமைப்படுத்தல் என்பது அதற்கு தீர்வல்ல. நாம் வாழும் உலகில் ஒரு யதார்த்தம் என்னவெனில், நாடுகளின் எல்லை ஊடாக பொருட்கள், சேவைகள் மற்றும் மக்களின் சுதந்திரம் இயக்கப்படுகிறது. சிறந்த வாழ்க்கையை எதிர்பார்த்து மேற்கொள்ளப்படும் இடம்பெயர்விற்கு தற்போதைய நிலைமை சவாலாக விளங்குகின்ற போதிலும், சாதாரணமானதொரு கட்டமைப்பின் கீழ் வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகள் சுதந்திரமாக காணப்பட வேண்டும்” என அவர் தெரிவித்தார்.

# 2,641 பேருக்கு நேற்று கொரோனா தொற்று



கொழும்பு, செப். 13

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 2 ஆயிரத்து 641 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 85 ஆயிரத்து 302 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,579 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 12 ஆயிரத்து 812 ஆக உயர்வடைந்துள்ளது.

## எதிர்காலத்திலாவது...

லிங்கம்.

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம், கோப்பாயிலுள்ள தனிமைப்படுத்தல் முகாமில் சிகிச்சை பெற்றுவரும் அவர், அங்கிருந்து கொண்டே இன்று ஆரம்பமாகும் ஜெனிவா கூட்டத் தொடர் குறித்து கருத்து வெளியிட்ட போது இதனைத் தெரிவித்தார். இது குறித்து மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:

“இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை, போர்க் குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்களுக்காக சர்வதேச நீதியை நோக்கி நாங்கள் போராடுகின்ற போது, ஆரம்பத்தில் பல பின்னடைவுகளைச் சந்தித்திருந்தாலும், எங்கள் தரப்பில் இப்போது இனப்படுகொலை என்பது எல்லோராலும் வலியுறுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதனைப்போலத்தான் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

எம்மைப் பொறுத்தவரையில் நாம் எதனைக் கேட்க வேண்டும் என்பதில் தெளிவான நிலைப்பாடு இருக்க வேண்டும். சர்வதேசம் அதனை அங்கீகரிக்க வேண்டிய நிலையைநோக்கி நாம் பயணிக்க வேண்டும்.

அந்தவகையில்தான் கடந்த செப்ரெம்பர் மாதம் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் உயர் ஸ்தானிகர் பச்லெட் அம்மையார் சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் எனக்கூறியிருந்தார். அவ்வாறு கொண்டுசெல்லப்பட்டு இலங்கை அரசின் குற்றங்கள் நிரூபிக்கப்படுகின்ற போது அதற்குத் தண்டனை வழங்குவது மட்டும் போதாது, எமக்கு ஒரு ஈடுசெய் நீதி வழங்கப்பட வேண்டும். அதேபோல பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும் நிவாரணங்களும் கிடைக்க வேண்டும்.

ஈடுசெய் நீதியாக ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தக்கூடிய நிலைமையை சர்வதேச நாடுகள் ஐ.நாவின் மேற்பார்வையில் பொறுப்பேற்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் ஒரே குரலில் தொடர்ந்தும் வலியுறுத்த வேண்டும். அதனை வலியுறுத்தக்கூடிய நிலை மூன்று பிரதான தரப்புக்களில் இரண்டு தரப்புக்களிலிருந்தே வந்திருக்கின்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் தேர்தல் அறிக்கைகளிலேயே முன்வைக்கப்பட்டிருந்தது.

இருந்த போதிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இவ்வருடம் தமது அறிக்கையில் அரசியல் தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பதைக் குறிப்பிடவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகியன அனுப்பிய அறிக்கையிலும் இது குறித்து தெரிவிக்கப்படவில்லை. எதிர்காலத்திலாவது ஒரேகுரலில் எமது கோரிக்கைகளை சர்வதேசத்திடம் நாம் வலியுறுத்தினால் நாம் எதிர்பார்க்கும் நீதியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.”

இவ்வாறு சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

## யாழ்., கிளிநொச்சியில் தொற்றால் மூவர் பலி!

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நேற்று மூவர் தொற்றால் உயிரிழந்தனர் என்று யாழ். போதனா மருத்துவமனை ஆய்வக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் இருவர் கிளிநொச்சியில் உயிரிழந்தனர். 94 வயது ஆண், 84 வயது பெண்ணுமே இவ்வாறு உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணத்தில் அச்சுவேலியை சேர்ந்த 50 வயது ஆண் ஒருவர் தொற்றால் உயிரிழந்தார். (ஐ)

## ஒருவேளை...

தாக்கத்தால் மக்கள் படும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். இதன் விளைவாக சில தியாகங்கள் செய்யப்பட வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள்கூட தங்கள் ஒரு மாத சம்பளத்தை கோவிட் - 19 நிதிக்கு தியாகம் செய்தனர். இன்று ஒரு சில தியாகங்களை செய்வது நாட்டை மீட்டெடுக்க உதவும் என்றும் அவர் மேலும் சொன்னார். (ஐ)

## கொரோனாவால்...

30 வயதுக்குட்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 16 ஆண்களும், 5 பெண்களுமாக என மொத்தமாக 21 பேர் மரணித்தனர்.

60 வயதுக்கு மேற்பட்ட 122 பேரின் மரணங்கள் பதிவாகியுள்ளன. அவர்களில் 61 ஆண்களும், 61 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 296 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## 156 பேருக்கே...

காரி பிரிவில் 2 பேர், நொதேர்ன் சென்றல் ஹொஸ்பிற்றலில் ஒருவர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒருவர், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒருவர் 17 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். தவிர பலாலி இராணுவ முகாமில் ஐந்து தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் 4 பேர், மல்லாவி ஆதார மருத்துவமனையில் 3 பேர், புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் ஒருவர் என மாவட்டத்தில் 8 பேரும், கிளிநொச்சி பொது மருத்துவமனையில் 3 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இரணைமடு தனிமைப்படுத்தல் முகாமில் ஒரு தொற்றாளர் இனங்காணப்பட்டார்.

மன்னார் மாவட்டத்தில் பொது மருத்துவமனையில் இருவர் அடையாளம் காணப்பட்டனர். வவுனியா மாவட்டத்தில் பொது மருத்துவமனையில் நால்வர், நெடுங்கேணி பிரதேச மருத்துவமனையில் ஒருவர், வவுனியா இராணுவ முகாமில் 2 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர்.

ஈழநாடு
Eelanadu

# மக்கள் நீதிமன்றத்தில் அரசின் விதி தீர்மானிக்கப்படும் நிலைமை வரும்

## சஜித் நேற்று அறிக்கையூடாக எச்சரிக்கை

கொழும்பு, செப்.13

**துரதிர்ஷ்டவசமான நிலைமையிலிருந்து மக்களை மீட்கும் பொறுப்பை அரசு ஏற்காவிட்டால், மக்கள் நீதிமன்றத்தில் அரசின் விதி தீர்மானிக்கப்படுவதைத் தடுக்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

"மக்கள் நீதிமன்றத்தில் அரசி ன் விதி தீர்மானிக்கப்படும்" எனும் தலைப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளார்.

தான்தோன்றித் தனமான, தூர நோக்கற்ற, பொறுப்பற்ற ஆட்சி காரணமாக கொரோனாத் தொற் றுக்கு மத்தியில் வேறெந்த நாடும் வீழ்ச்சியடையாத அளவுக்கு வங்கு ரோத்து நிலையை இலங்கை அடைந்துள்ளது எனவும் எதிர்க் கட்சித் தலைவர் அந்த அறிக் கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளதாவது:-

"தமது அரசியல் மற்றும் சுய நலவாத நிகழ்ச்சி நிரலுடனான சூதாட்டத்துக்கு மக்களின் வாழ்க் கையை அரசு பயன்படுத்துகின்றது.

இந்தத் துயரத்தை நாட்டின் அடுத்த தலைமுறை கூட எதிர் நோக்க நேரிடும் என்பதை அரசு நினைவில்கொள்ள வேண்டும்.

மூன்று வேளைகள் அன்றி ஒரு வேளையேனும் போஷாக்கான உணவைப் பெற முடியாத அள வுக்கு மக்கள் நிர்க்கதியாகியுள்ள நிலையில், அரசின் சில பாராளு மன்ற உறுப்பினர்கள் மூன்று வேளை உணவை இரண்டு வேளை, அல்லது ஒரு வேளையாக மட்டுப் படுத்திக்கொள்ளுமாறு தெரிவிக் கும் அளவுக்கு 'அரசின் சுபீட்சம்" பெருக்கெடுத்துள்ளது.

தாங்க முடியாத அளவுக்குப் பொருட்களின் விலை அதிகரித் துள்ள நிலையில், பஞ்சம் நிறைந்த நாடு மற்றும் வரிசையில் நிற்கும் யுகம் உருவாகி வருகின்றது.

பிரச்னை ஏற்படும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அரசு பதவிகளில் மாற்றத்தைச் செய்கின்றதே ஒழிய, ஏற்படும் பிரச்னைக்குத் தீர்வு காண்பதில்லை. பொருளாதார அல குகளை முறையாக முகாமைத்துவம் செய்து, நாட்டு மக்களுக்கு நிதி ரீதியிலான உந்துசக்தியை அரசு காலம் தாழ்த்தாது வழங்க வேண் டும்" - என்றுள்ளது. (இ)



# சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது

பொகவந்தலாவை, செப். 13

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காசல்ரீ நீர் தேக்கத்துக்கு நீர் வழங்கும் கெசல்கமுவ ஆற்றில் சட்ட விரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நால் வரை, பொகவந்தலாவைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளானர்.

இதன்போது மாணிக்கக்கல் அகழ்வுக்குப் பயன் படுத்திய உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றி யுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்தத் தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே குறித்த நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# சுற்றுலா விடுதிகளில் மதுபானம் விற்பனை செய்வதற்கு அனுமதி

கொழும்பு, செப். 13

சுற்றுலா அதிகார சபையின் அனுமதியுடன் அனைத்து சுற்றுலா விடுதிகளிலும் மதுபானங்களை விற்பனை செய்வதற்கான அனுமதி வழங்கவுள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உயிர்குமிழி முறைமையின் கீழ், இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிகளுக்கேற்ப இந்த நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, பொதுமுடக்கம் நீக்கப்பட்டதன் பின்னர், பொதுமக்கள் மதுபானசாலைகளுக்கு முன் பாக ஒன்றுதிரள்வதைத் தடுப்பது, அனுமதிப்பத்திரம் பெற்ற மதுபானசாலை உரிமையாளர்களின் பொறுப்பாகும்.

மதுபானசாலைகளுக்கு முன்பாக பொதுமக்கள் அதிகமாக ஒன்றுகூடும் பட்சத்தில் அதன் உரிமை யாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 4 ஆயிரத்து 500 மதுபான சாலைகள் காணப்படுகின்றன. மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ளதால் நாளொன் றுக்கு அரசுக்கு 70 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது" - என்றார். (இ)

# கரவெட்டி தேவாலயத்தில் திருடர்கள் கைவரிசை

வடமராட்சி, செப். 13

யாழ்., வடமராட்சி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி வீதியில் அமைந்துள்ள மாதா தேவாலயத்தில் நேற்றுக் காலை ஒலி பெருக்கி சாதனங்கள் திருடப்பட் டுள்ளன என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேவாலயத்தின் முன் வாசல் பூட்டு உடைக்கப்பட்டு, கண்காணிப்புக் கமராக்களுக்கான மின்சாரம் துண்டிக் கப்பட்டு, கமராக்களும் உடைக்கப்பட்டு திருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆலய பிரதான மண்டபத்தின் அருகில், ஆலயப் பொருட்கள் வைக்கப்பட்ட சிறிய அறை உடைக்கப் பட்டு, அதனுள் இருந்த ஒலி பெருக்கி மற்றும் அதனு டன் தொடர்புடைய சாதனங்கள் திருடப்பட்டுள்ளன.

அத்துடன், ஆலயத்தின் வெளியில் அமைக்கப்பட்ட களஞ்சிய அறையும் உடைக்கப்பட்டுள்ளது.

களவாடப்பட்ட பொருட்களின் விபரம் முழுமையா கத் தெரியவில்லை என முறைப்பாடு பதிவு செய்யப்பட் டுள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ - 02)

# தொற்றால் இறந்தோரின் சடலங்களை எரிக்க நிதி!

கொழும்பு, செப்.13



கொரோனா தொற்றால் உயிரிழப்ப வர்களின் சடலங் களை தகனம் செய் வதற்கு, தலா 5,000 ரூபாய் என்ற அடிப் படையில் நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டுள் ளதாக, உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

முதற்கட்டமாக ஒரு கோடியே 20 இலட் சத்து 85 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி அமைச்சுக்குரிய தகன சாலைகளின் செலவீனத்தை பெற்றுக் கொடுப்பதற்காகவே, இந்த நிதி ஒதுக்கீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஓகஸ்ட் 31ஆம் திகதி வரையில் தகனம் செய்யப்பட்ட 2,417 சட லங்களுக்காக இந்த நிதி ஒதுக் கீடு செய் யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பொலிஸ் சார்ஜனை காணவில்லை

கம்பளை, செப். 13

திடீர் உடல்நலக் குறைவு காரணமாக கம்பளை வைத் தியசாலையில், கடந்த 8ஆம் திகதி சேர்க்கப்பட்ட பொலிஸ் சார்ஜன் ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று அவரது உறவினர்கள், கம்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கொத்மலை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் சார்ஜ னாகக் கடமையாற்றி வந்த சுப்பையா இளங்கோவன் என் பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இவர் சுகயீனம் காரணமாக கடந்த 8ஆம் திகதி கம்பளை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், அன் றைய தினமே காணாமல் போயுள்ளார்.

இந்நிலையில், உறவினர்க ளின் முறைப்பாட்டுக்கு அமை வாக காணாமல்போன பொலிஸ் சார்ஜனைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர் கடந்த மாதம் 10ஆம் திகதி கொரோனாத் தொற்றுக் குள்ளானதையடுத்து அவர் உட் பட்ட அவரது குடும்பத்தினர் 14 நாட்கள் தனிமைப்படுத்தப் பட்டனர். இந்நிலையில், கடந்த 7ஆம் திகதி திடீரென அவருக்கு சுக யீனம் ஏற்பட்டுள்ள நிலையில், 8ஆம் திகதி காலை 6 மணியள வில் 1990 அவசர அழைப்பு நோயாளர் காவு வண்டியினூடாக கம்பளை மாவட்ட வைத் தியசாலையில் சேர்க்கப்பட் டார். (இ)

# விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த குடும்பஸ்தர் யானை தாக்கி உயிரிழப்பு

அநுராதபுரம், செப். 13

அநுராதபுரம் மாவட்டம், கஹடகஸ்திகிலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈத்தல் வெட்டுனுவெள பகுதியில் யானை தாக்கியதில் மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது.

ஈத்தல்வெட்டுனுவெள - கொக்கபே அணைக்கட்டுப் பகுதியில் விவசாய நடவடிக் கையில் ஈடுபட்டிருந்த நிலை யில் அவர் யானையின் தாக்கு தலுக்கு இலக்காகியுள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த 54 வயதான குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவரின் சடலம் கஹடகஸ்திகிலிய பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை கஹட கஸ்திகிலிய பொலிஸார் முன் னெடுத்துள்ளனர். (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துணையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : கொழும்பு-16
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் (மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-வேங்கை,வேதாளம் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா-மகப்பேற்று வைத்திய நிபுணர் ப.ஸ்ரீதரன்



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம் (திருகோணமலை) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை) மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு